ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39] ரௌத்திரி ஆண்டு சித்திரைத் திங்கள் 10—5—80 [இதழ்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழா 4—6—80

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—★—

மற்றொருவர் தஞ்சமின்றி
வந்தடைந்தக் கால்எனை நீ
சற்றுமிரங் காதிருக்கை
தன்மையோ — கொற்றவா
பாவலா கூடற்
பரமா பரதேசி
காவலன் நீ தானுனைக் கால்.

—சொக்கநாத வெண்பா. 64

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்.

உ

குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 39 | 10—5—80 | இதழ் 6

உட்பொருள்

எண்		பக்கம்
1	திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் பெருவிழா திருநெறியதெய்வத்தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள்	க
2	அடிப்படைப்பண்புகளைக் காப்போம்! ...	241
3	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	245
4	மாயூரம்–குமரக்கட்டளை திருவிளக்கு அறக்கட்டளை அறிவிப்பு ...	251
5	திருமீயச்சூர், திருமீயச்சூர் இளங்கோயில் தலச் சிறப்புக்கள் ...	257
6	அன்னையருள் மாலை	262, 276
7	அபிராமி அந்தாதி ...	263
8	களைக, இணங்குக, வழிபடுக! ...	271
9	கடிதப் பாடல்கள் ...	275
10	அறுகயிறுசல் ...	277
11	செய்திகள் ...	279
12	எதிர்காலம் ...	283

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 9.
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 11.
ஆண்டுச் சந்தா வெளிநாடு ரூ. 17.
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100.
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 125.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்

பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத்தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள்மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இத் தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப்பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகர் அருளையும் நிரம்பப்பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள் தம் குருமூர்த்தி களது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்துவருவதற்குரிய ஞானபீடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து ஜீவசமாதி கூடிய கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு **ரௌத்திரி ஆண்டு வைகாசித்திங்கள் 13 ஆம் நாள் (26—5—80) திங்கட்கிழமை** தொடங்கிப் பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும், சமயப் பயிற்சி வகுப்பும் நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக்காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவு களைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

தருமையாதீன மடாலயம்,
ரௌத்திரி – வைகாசி.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்
கார்பார் சொக்கநாதத் தம்பிரான்.

சிவமயம்

ஸ்ரீ ஆதிபரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சைவ வேளாள மரபில் ஸ்ரீ சுப்பிரமணியப் பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்களுக்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுபதினத்தில் தோன்றினார். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினார். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன் சென்ற ஞானசம்பந்தர் **"உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே"** என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ் வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினார். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்று வந்த நாம், பூஜைப்பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திசையில் இருக்கின்றோம்; மூழ்கிப் பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின்னர், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று "பெருமானே! பூசிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினார். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி. **"திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும் சிவபூஜையும் பெறுக"** என்று பணித்தருளி ஞானப்பிரகாசரது கனவிலும்சென்று, "உன்னிடம்

வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானுேபதேசம்செய்து சிவபூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக'' என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக்கடவுளின் திருமுன்பு சிடரின் வருகையை ஞானப்பிரகாசர் எதிர்நோக்கியிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி. சிவதீக்ஷையும், சிவபூஜையும் பெற்ருர். பின்பு அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒரு நாள், ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கு எடுப்போன், அங்கு இல்லாமைகண்டு, ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் இல்லம் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது 'நிற்க' என்று சொல்லி உள்ளேசென்ருர், குருவாணையைக் கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது. ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட்காலையில் குருபத்தினியார் கண்டார். குருமூர்த்தியும் கேட்டு வந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனியிடத்தில் இருந்து உம்மைநாடி ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைத்துச் சமய பரிபாலனம் புரிக' என்றருளினர். சிடர்,

''கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங்கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி? அப்படியாக உரைத்தருளே.

என்று வேண்டினர். அதுகேட்டுக் குருமூர்த்திகள் "தருமபுரம் செல்க" எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் தருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர்வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதிபரமாசாரிய மூர்த்திகள்.

சிவ மயம்

திருநாள் விபரம்

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	திரு நாள்	விபரம்
12	25—5—80	ஞாயிறு		காலை கணபதிஹோமம். நவக்கிரஹஹோமம் இரவு ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மணி 8-க்கு மேல் 9-க்குள் தனுர் லக்னத்தில் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, வாஸ்து சாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்.
13	26—5—80	திங்கள்	1	சித்திரை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் காலை மணி 10-க்குமேல் 11-க்குள் மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீஞானபுரீசுவரசுவாமி மஹாத்துவஜாரோஹணம்.
ஸ்ரீ வைகாசி 14	27—5—80	செவ்வாய்	2	கற்பக விருக்ஷக் காட்சி.
15	28—5—80	புதன்	3	பூதம், பூதகி, இடும்பவாகனக் காட்சி
16	29—5—80	வியாழன்	4	நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி.
17	30—5—80	வெள்ளி	5	சகோபுர ரிஷபவாகனக் காட்சி.

18	31—5—80	சனி	6	யானை, அன்னம், ஆட்டுக்கிடா வாகனக் காட்சி.
19	1—6—80	ஞாயிறு	7	இரவு மணி 8 - க்குமேல் 10 - க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம். புஷ்பவிமானம் வெள்ளிரதக் காட்சி.
20	2—6—80	திங்கள்	8	குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி.
21	3—6—80	செவ்வாய்	9	காலை மணி 6-30க்குமேல் 7-15க்குள் மிதுன லக்னத்தில் மஹாரதாரோகணம், **திருத்தேர்** வடம் பிடித்தல்.
22	4—6—80	புதன்	10	காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளுளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோகணம்.
23	5—6—80	வியாழன்		மௌன உற்சவம்.
24	6—6—80	வெள்ளி		ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம்.
25	7—6—80	சனி		காலை உற்சவப் பிராயச்சித்தாபிஷேகம். இரவு மணி 7-க்குமேல் 8-க்குள் தனுர் லக்னத்தில் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம்.

தருமையாதீனம் குருபூஜை விழா

தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

தொடக்க உரை: டாக்டர்.

காலம் கிழமை	காலை 10-30 to 11-30	11-30 to 12-30
26—5—80 ஞாயிறு	"சிவஞானபோதம்" மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார்	"திருவருட்பயன்" மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர்
27—5—80 திங்கள்	,,	,,
28—5—80 செவ்வாய்	,,	,,
29—5—80 புதன்	,,	,,
30—5—80 வியாழன்	,,	,,
31—5—80 வெள்ளி	,,	"திருக்களிற்றுப்படியார்" திரு. N. R. முருகவேள்
1—6—80 சனி	,,	,,
2—6—80 ஞாயிறு	,,	,,

சமயப் பயிற்சி வகுப்பு

குருமகா சந்நிதானம்
பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை

திரு. ச. அகத்தியலிங்கம் அவர்கள்

2 - 30 to 3 - 30	3 - 30 to 4 - 30
"வேதங்கள்" திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்	"மூவர் தேவாரம்" திரு. சொ. சிங்காரவேலனுர்
"	"பிறதிருமுறைகள்" திரு. ம. சிவசம்பு
"ஆகமங்கள்" திரு. சுவாமிநாத சிவாசாரியார்	"கந்த புராணம்" திரு ஆ இராமபத்திரன்
"	"திருவிளையாடல்புராணம்" திரு. மு. சிவச்சந்திரன்
"உபநிடதம்" திரு பி இராமதாச ஐயர்	"பெரியபுராணம்" திரு. தி. வ. காந்திமதிநாதன்
"இதிகாசங்கள்" திரு. பி இராமதாச ஐயர்	"சைவக்கிரியைகள்" திரு வி.சா. குருசாமிதேசிகர்
"புராணங்கள்" திரு கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்	"நீதி நூல்கள்" திரு. அ. கலியபெருமாள்
"பண்டார சாத்திரங்கள்" திரு. வி சா. குருசாமி தேசிகர்	"சமய விழாக்கள்" திரு. மு. ஆறுமுகதேசிகர்

குருபாதம்

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

26—5—80 திங்கள்] [மாலை 6-30 மணி

முதல் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, வேளூர் தேவஸ்தானம்.

சிறப்புரை :

திரு. B. V. பாலகிருஷ்ணன் எம். ஏ.,
ஆணையர், வருமானவரி அலுவலகம், சென்னை.

விரிவுரை :

புலவர் திலகம்,
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,
புலவர் திரு. கீரன் எம். ஏ. (ஆங்கிலம்) பி. லிட். (தமிழ்)
லால்குடி, திருச்சிராப்பள்ளி.

— மெய்ப்பொருள் நாயனார்

இரவு 9-00 மணி

குழந்தைகள் கலை நிகழ்ச்சி

தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி
மாணவ — மாணவியர்

27—5—80 செவ்வாய்] [மாலை 6-30 மணி

இரண்டாம் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்.

சிறப்புரை :

மாண்புமிகு திரு. வி. சேதுராமன் பி. ஏ., பி. எல்.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

புலவர்திலகம்,
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,
புலவர். திரு. கீரன் எம். ஏ. (ஆங்கிலம்) பி. லிட். (தமிழ்)
லால்குடி, திருச்சிராப்பள்ளி.

— சிறுத்தொண்டர்

இரவு 9-00 மணி

குழந்தைகள் கலை நிகழ்ச்சி

தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி
மாணவ — மாணவியர்

28—5—80 புதன்] [மாலை 6-30 மணி

மூன்றும் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
சென்னை – தருமையாதீன சமயப் பிரசார நிலையம்.

சிறப்புரை :

மாண்புமிகு திரு. வி. இராமசாமி பி. ஏ., பி. எல்.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

புலவர்திலகம்,
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,
புலவர் திரு. கீரன் எம். ஏ., (ஆங்கிலம்) பி, லிட். (தமிழ்)
லால்குடி, திருச்சிராப்பள்ளி.

— திருநீலகண்டர்

இரவு 9-00 மணி

கரக ஆட்டக் கலை நிகழ்ச்சி

திரு. N. மாரிசாமி B. Com., (N. B. A.)
உப்பர்பட்டி.

29—5—80 வியாழன்] [மாலை 6-30 மணி

நான்காம் திருநாள்

வரவேற்புரை :

ஸ்ரீமத் பொன்னம்பலத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, சீகாழி தேவஸ்தானம்.

சிறப்புரை :

டாக்டர் திரு. மு. சுவாமிநாதன் எம். பி., பி. எஸ்,
மாயூரம்.

விரிவுரை :

புலவர் திலகம்,
திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,
புலவர் திரு. கீரன் எம். ஏ. (ஆங்கிலம்) பி. லிட். (தமிழ்)
லால்குடி, திருச்சிராப்பள்ளி,

— நக்கீரர்

இரவு 9-00 மணி
பக்திப் பாடல்கள்
செல்விகள் ஜெயசாந்தி & ஜெயசுகந்தி குழுவினர்
மாயூரம்,

30—5—80 வெள்ளி] [மாலை 6-30 மணி

ஐந்தாம் திருநாள்

வரவேற்புரை :

ஸ்ரீமத் கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, குறுக்கை தேவஸ்தானம்.

சிறப்புரை :

மாண்புமிகு திரு. S. பாலசுப்பிரமணியன் பி. ஏ. பி. எல்.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

திரைப்பட இயக்குநர்,
திரு. G. V. ஐயர்
சென்னை,

விரிவுரை :

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,

புலவர் திரு. கீரன் எம். ஏ. (ஆங்கிலம்) பி. லிட். (தமிழ்)

லால்குடி, திருச்சிராப்பள்ளி.

— மாணிக்கவாசகர்

இரவு 9-00 மணி

இன்னிசை

இசையரசி திருமதி வி. பிரேமா குழுவினர்.

தஞ்சாவூர்.

31—5—80 சனி] **[மாலை 6-30 மணி**

ஆறுந்திருநாள்

வரவேற்புரை :

வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ.

முதல்வர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

மாண்புமிகு திரு. S. சூரியமூர்த்தி பி. ஏ., பி. எல்.,

உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

குழலிசைச்செல்வர், முத்தமிழ்வித்தகர்,

திரு. கே. குணபூஷணம்

வேலூர்.

— முருகன் திருவவதாரம்

இரவு 9-00 மணி

இன்னிசைக் கதை

பேபி எஸ். ஜெயஸ்ரீ தஞ்சாவூர்.

" வள்ளித்திருமணம் "

புல்லாங்குழல் இசை

செல்வன் சி. பாலசந்திரன், தஞ்சாவூர்.

1—6—80 ஞாயிறு] [மாலை 6-30 மணி

ஏழாந்திருநாள்

ஸ்ரீ ஞானம்பிகை உடனுறைய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கல்யாணத் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.
தமிழ்ப்பேராசிரியை, த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

மாண்புமிகு திரு. கே. சண்முகம் பி. ஏ., பி. எல்.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

குழலிசைச்செல்வர், முத்தமிழ்வித்தகர்,
திரு. கே. குணபூஷணம்
வேலூர்.

— வீரவாகுதேவர் தூது

இரவு 9-00 மணி

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில்
பிர்மஸ்ரீ. கே. இராமதாச ஐயர்
ஆனந்ததாண்டவபுரம்.

— திருக்கல்யாணதத்துவம்

இரவு 10-00 மணி

பொம்மலாட்டம்
ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடகசபை, மாயூரம்
" வள்ளித்திருமணம் "

2—6—80 திங்கள்] [மாலை 6-30 மணி

எட்டாந்திருநாள்

வரவேற்புரை :

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,
தமிழ்ப்பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

மாண்புமிகு திரு. செங்கோட்டுவேலன் பி. ஏ., பி. எல்.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

விரிவுரை :

குழலிசைச்செல்வர், முத்தமிழ்வித்தகர்,
திரு. கே. குணபூஷணம்
வேலூர்.

— **வள்ளியம்மை திருமணம்**

இரவு 9–00 மணி

படக்காட்சி

3—6—80 செவ்வாய்] [காலை 10-30 மணி

ஒன்பதாந்திருநாள்

திருமுறைப் பேரவை

ஆசியுரை :

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சிறப்புரை :

முத்தமிழ்க்காவலர்,
டாக்டர். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்
திருச்சிராப்பள்ளி.

3—6—80 செவ்வாய்] [பகல் 2-30 மணி

ஆய்வரங்கம்

சமய வளர்ச்சி பற்றிய செயல்முறைச் சிந்தனைகள்

இணைப்பாளர் :

செந்தமிழ்ப்புரவலர்,
திரு. இரா. இராஜசேகரன் பி. எஸ்சி., பி, எல்.,
தாசில் பண்ணை, மேலையூர்.

தமிழகச் சமய மன்றச் சார்பாளர்கள் சிந்தனைப் பரிமாற்றம்

3—6—80 செவ்வாய்] [மாலை 6-30 மணி

திருமுறைப் பேரவை

(திருஞானசம்பந்தர் தேவாரம்)

வரவேற்புரை :

புலவர். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ.,
தமிழ்ப்பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

சிலம்புச்செல்வர்.
மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்
தமிழ்நாடு சட்டமன்ற மேலவைத் தலைவர்
சென்னை.

விரிவுரைகள் :

டாக்டர் திரு. ஔவை. நடராசன் எம். ஏ., பிஎச். டி.,
இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை, சென்னை.

— **இயற்கை எழில்**

செந்தமிழ்ச்செல்வர்,
திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.,
ஆசிரியர், "கலைமகள்" சென்னை,

— **சமூகநோக்கு**

இரவு 9-00 மணி

இன்னிசைக் கதை

செல்வி. மங்கையர்க்கரசி குழுவினர்

தூத்துக்குடி.

4—6—80 புதன்] [காலை 9-00 மணி

குருபூஜைத் திருநாள்

சாத்திரப்பேரவை - திருஞானசம்பந்தர் தேவாரம்

வரவேற்புரை :

வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன்
தமிழாசிரியர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம்.

சிறப்புரை :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்.

ஸ்ரீமத் காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

விரிவுரை :

திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர், பேராசிரியர்.

வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனார்

சிதம்பரம்.

— திருஞானசம்பந்தர் தேவாரத்தில் இறை இயல்பு

தருமையாதீனப்புலவர்,

மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர்

மதுரை.

— திருஞானசம்பந்தர் தேவாரத்தில் உயிர் இயல்பு

தருமையாதீனப்புலவர்,

வித்துவான் திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.

முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

— திருஞானசம்பந்தர் தேவாரத்தில் தளையியல்பு

காலை 10-30 மணி அளவில்

சொக்கநாதப் பெருமான் வழிபாடு

குருபூஜை விழா மலர்

“ சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் ”

4—6—80 புதன்] [பகல் 2 மணி

ஆய்வரங்கம்

சமய வளர்ச்சிபற்றிய செயல்முறைச் சிந்தனைகள்

இணைப்பாளர் :

திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர், பேராசிரியர்.

வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனார்

சிதம்பரம்.

தமிழகச் சமய மன்றச் சார்பாளர்கள் சிந்தனைப்பரிமாற்றம்

4—6—80 புதன்] [மாலை 4–00 மணி

திருமுறைப் பேரவை

(திருஞானசம்பந்தர் வாழ்வும் வளமும்)

வரவேற்புரை :

வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்.

சிறப்புரை :

முன்னாள் மத்திய அமைச்சர்,
திரு. ஒ. வி. அளகேசன்
செங்கற்பட்டு.

விரிவுரை :

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,
தமிழ்ப்பேராசிரியர். த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

— **பண்பாட்டுக்கூறுகள்**

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தப் புலவர்மணி,
புலவர். திரு. ந. ரா. முருகவேள் எம் ஏ., எம். ஓ. எல்.,
ஆசிரியர். " திருக்கோயில் " சென்னை.

— **இலக்கியக்கூறுகள்**

திருமுறைக்கலாநிதி, பண்ணாராய்ச்சிவித்தகர்,
திரு. ப. சுந்தரேசனார்
குடந்தை.

— **இசைக்கூறுகள்**

மாலை 6-00 மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
காவிரித் திருமஞ்சனத்திற்கும், குருமூர்த்த வழிபாட்டிற்கும்
எழுந்தருளுதல்.

இரவு 8–30 மணி

இன்னிசை

இசைஞானப்பேரரசி,
குடந்தை. திருமதி. வி. பி. இராஜேஸ்வரி குழுவினர்

5—6—80 வியாழன்] [காலை 9-00 மணி

பட்டினப்பிரவேசத் திருநாள்

வினு விடை அரங்கம்

வரவேற்புரை :

புலவர். திரு. இரா செல்வக்கணபதி எம். ஏ.
தமிழ்ப்பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

பொருள் :

'இன்றையநிலையில் வாழ்வு நெறிக்குச் சைவ சமயத்தின்பங்கு'

தலைமை :

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி மகாசந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

அவையோர் எழுப்பும் ஐயங்களைத் தெளிவு செய்வோர் :—

தருமையாதீனப்புலவர்,
மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார்
திருக்குறள் ஆராய்ச்சித்துறை, அ. ப. கழகம்.

பேராசிரியர், திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர்.
வித்துவான் திரு. க. வெள்ளைவாரணனர்
சிதம்பரம்.

திரு. மீ. ப. சோமு
தென்மண்டல நிகழ்ச்சி அமைப்பாளர், அ. இ. வானொலி நிலையம்,
சென்னை.

காலை 10-00 மணி அளவில்

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

நண்பகல் 1-00 மணி

மாகேசுவரபூஜை

பகல் 2–00 மணி

ஆய்வரங்கம்

சமய வளர்ச்சிபற்றிய செயல்முறைச் சிந்தனைகள்

இணைப்பாளர் :

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தப் புலவர்மணி,

திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்.,

ஆசிரியர், “ திருக்கோயில் ” சென்னை.

தமிழகச் சமயமன்றச் சார்பாளர்கள் சிந்தனைப்பரிமாற்றம்

மாலை 4–00 மணி

திருமுறைப்பேரவை

(ஆளுடையபிள்ளையார் பெற்ற அலங்கல்கள்)

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையம்.

சிறப்புரை :

அறப்பணிச் செல்வர்,

டாக்டர் திரு கே. அரங்கசாமிப்பிள்ளை எம். பி., பி. எஸ்.

சிதம்பரம்.

விரிவுரை :

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தப் புலவர்மணி,

திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ. எம். ஓ. எல்.

ஆசிரியர். திருக்கோயில், சென்னை.

— சேக்கிழார் குட்டியனை

செஞ்சொற்கொண்டல்,

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.,

தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

— பிற ஆசிரியர்கள் சூட்டியன

திரு. வி. எம். மந்திரம் எம். ஏ., பி. டி.,

தலைமையாசிரியர், ஸ்ரீ இராமகிருஷ்ண மேல்நிலைப்பள்ளி,

சென்னை - 17.

— திருக்கடைக்காப்பு

சமயப்பயிற்சி வகுப்பு மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல்:

ஜஸ்டிஸ் டாக்டர். திரு. B. S. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்.

துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மாலை 7-00 மணி

இன்னிசை

இசைமணி, தருமையாதீன இசைப்புலவர்,

சீகாழி. திரு. எஸ். கோவிந்தராஜன் குழுவினர்

இரவு 10-00 மணி முதல்

தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

பட்டினப்பிரவேசம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்த மாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைதிரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட திறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின் விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்தசரணாலயர்.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 39 | ரௌத்திரி – சித்திரை - 10—5—80 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

அடிப்படைப்பண்புகளைக் காப்போம்!

ஆன்மிக அடிப்படை

உலக வரலாற்றிலேயே, இந்திய விடுதலைப்போராட்டம் புதுமையானது. கத்தியின்றி, ரத்தமின்றி நிகழ்த்திய யுத்தம் அண்ணல் காந்தியடிகளுக்குப் பெருமை சேர்த்தது. காந்தியடிகளுக்குக் கிடைத்த வெற்றி, ஆன்மிக அறநெறிப் பண்புகளுக்குக் கிடைத்த வெற்றியே யாகும். ஆன்மிகமும், இவற்றின் அடித்தளமாக விளங்கும் சமய வாழ்வும், இதன் விரிவாக அமையும் திருக்கோயில் திருமடங்கள் மற்றும் ஏனைய அறநிலையங்களும் காந்தியடிகளின் அஹிம்சைப் போராட்டத்துக்கு ஊற்றம் விளைத்தன. இந்திய நாட்டின் ஆட்சியாளர்கள், தேசப்பிதா காந்தியடிகளை மெள்ள மெள்ள மறந்துவருவது போல, அவர் போற்றிக்காத்த ஆன்மிக அறப்பண்புகளையும் மறந்து வருகிறார்களோ என எண்ணவேண்டியுள்ளது. அடிப்படைப் பண்புகளைப் புறக்கணித்த எந்த ஒருநாடும் முன்னேறியதாக வரலாறு

இல்லை. மத்திய, மற்றும் மாநில அரசினை நடத்திச் செல்வோர் இந் நாட்டின் பண்பாட்டுச் சின்னங்களாக - ஒருமைப்பாட்டின் சின்னங் களாக - அமைதிச் சின்னங்களாக நின்று பக்திப்பயிர் வளர்க்கும் அறநிலையங்களுக்கு அறிந்தும் அறியாமலும் இழைத்துவரும் அநீதிகள் நாளும் நாளும் வளர்ந்துகொண்டேபோவது வேதனைக்கு உரியதாக உள்ளது.

சமய உலகுக்குப் பேரதிர்ச்சி

தமிழ்நாட்டை இரண்டரை ஆண்டுக்காலம் ஆட்சிசெய்த அ. தி. மு. க. அரசு போகிறபோக்கில் இயற்றிவைத்துவிட்டுப்போன 75-25 குத்தகை வார அவசரச்சட்டம் அறநிலையங்களை எவ்வாறு மேலும் முடமாக்கிவிடும் என்பதனை ஞானசம்பந்தமும், ஏனைய சமய நாட்டங்கொண்ட பத்திரிகைகளும் அரசுக்கும் மக்களுக்கும் விளக்கிக் கூறின. எவ்வளவு கூறியும் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காய் பயனின்றிப் போயின. மாறாக மதிப்புக்குரிய குடியரசுத்தலைவர் அவர்கள் இவ்வவசர அலங்கோலச் சட்டத்திற்கு ஒப்புதலும் வழங்கிவிட்டார்கள் என்ற செய்தி, சமய உலகுக்குப் பேரதிர்ச்சியாக அமைந்தது. அடிப்படையான அறப்பண்புகள் எல்லா வற்றையும் முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு அரசியல் லாப நோக்கில் இயற்றப்பெற்ற இச்சட்டத்தால் ஏழைநிலவுடைமையாளர் களும், நிலவருவாயை மட்டுமே நம்பியிருக்கும் அறநிலையங்களை நடத்திச்செல்லும் பொறுப்புடையோரும் எவ்வாறு பாதிக்கப்படுவர் என்பதனைக் குடியரசுத்தலைவர் அவர்கள் ஊன்றி மதிப்பிடாது ஒப்புதல் அளித்தது பெரிதும் வேதனைக்குரியதாகும்.

இனிச் செய்யத்தக்கது

மக்கள் தவறுசெய்தால் மன்னனிடம் முறையிடலாம். மன்னனே தவறுசெய்தால் இறைவனிடம் முறையிடுவதைத்தவிர வேறுமார்க்கம் உண்டோ? ஆன்மிகநெறி வளர்க்கும் அறநிலையங்களைப் புரந்து வரும் கடமையுணர்வு மிக்கவர்கள் இறைவன் முன்நின்று "இறை வனே! உயிர்கள் உய்திபெறுவதற்காக உன்னால் வகுக்கப்பட்டதே அறநெறி; அவ்வறநெறி வளர்க்கும் அறநிலையங்களை உன் அருளா லன்றி யாராலும் அழிக்கமுடியாது; உன் அருளே அழிவிற்குத்துணை நிற்குமானால் அடியார்களாகிய நாங்கள் அரசையோ பிறரையோ நொந்துகொள்வதில் பயன் என்ன" என்று பிரார்த்தனைசெய்வதைத் தவிர வேறுவழி என்ன இருக்கிறது? கொடிபிடிப்பதோ, புரட்சிப் போர்க்கொடி உயர்த்துவதோ சமயப்பண்பிற்கு ஒத்ததல்லவே! எனவே இப்படிப்பட்ட நேரத்தில் பிரார்த்தனையே செய்யத்தக்கது.

இதனைத்தான் அனுபூதிமானாக விளங்கிய தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தரும் நமக்கு உணர்த்தியருளுகிறார்.

“ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தில்
மோசம் வந்ததென்று மொழியலாம் — ஈசனே
ஆக்குவதும் ஆக்கி அழிப்பதுவும் தானானால்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து”

எல்லாம் வல்ல பரம்பொருள் இடையில்வரும் தடைகளைத் தவிர்த்து நன்மைகளையே விளைக்கும் என்று நெஞ்சில் ஆறுதல்கொள்வதோடு, பக்தர்கள் நாள்தோறும் தமது வழிபாட்டில் இப்பாடலையே பிரார்த்தனையாகக் கொள்ளவேண்டுகிறோம்.

அநீதிகள் தொடர்ந்தால் ?

சாதுமிரண்டால் காடுகொள்ளாது என்பது பழமொழி. சமயவாதிகள் கோழைகளல்லர். ‘நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்’ என்றநெஞ்சுறுதி மிக்கவர்கள். சமயத்துறையைச்சார்ந்து வாழ்பவர்களும், சமயநாட்டமுடையவர்களுமாகிய கோடானுகோடி மக்கள் சமயத்திற்கு இழைக்கப்படும் அநீதிகண்டும் கொதித்தெழுந்து போராட்டங்களில் ஈடுபடாது அமைதிகாத்துவருவது சமயஞ்சார்ந்த பண்பாட்டால்தான் என்பதனை அரசியல்வாதிகள் நினைத்தல்வேண்டும். குட்டக்குட்டக் குனிபவன் முட்டாள் என்று அவர்கள் உணர்ந்தேயிருக்கிறார்கள். மாணாக்கர்களுக்குக் கல்வியோடு அறநெறிப் பண்புகளையும் குழைத்துக் கற்பித்து, நடைமுறையில் தாமே வாழ்ந்துகாட்டவேண்டிய கடப்பாடுடையவர்கள் ஆசிரியர்கள். அப்படித்தான் சமீபகாலம்வரை இருந்துவந்தார்கள். அவர்களுக்கு இழைத்த அநீதி மிகுதியால் தங்கள் நலங்குறித்துப் போராட்டங்களில் இறங்கியுள்ளனர். இது சில சமயங்களில் மிகையாகவுங் கூடப் போகிறது. இதை அரசியலார் நன்கு கவனிக்கவேண்டும். சமயத்துறைக்கு இழைக்கப்படும் தொடர்ந்த அநீதிகள் ஒருநாள் மக்கள் மத்தியில் போராட்டமாக உருவெடுத்தால் அதற்கான காரணத்தையும் பொறுப்பையும் அரசியல்வாதிகளே ஏற்கவேண்டிவரும் என்பதனைக் கடமையுணர்வோடு நினைவூட்டுகின்றோம்.

சமயம் சார்ந்தோர் கடமை

சமய வளர்ச்சிக்கு ஊறுவிளைக்கும் சட்டங்களால் நிலைகுலைந்து வரும் இந்து சமய அறநிலையங்களுக்கு, இந்நாட்டில் வந்தேறிய புறச்சமயங்கள், சிறுபான்மையினர் என்ற செல்வாக்கோடும், நிறைவான நிதிவசதிகளோடும் இந்துமதத்திற்கு இழைத்துவரும் இன்னல்களையும் சமாளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாட்டில் சமயவளர்ச்சிக்காகப் பல்லாண்டுகளாகப் பணியாற்றிவரும்

சமயமன்றங்கள், நிலையங்கள், பிற அமைப்புக்கள் போன்றவை ஒருங்கிணைந்து செயல்படுவது பெரிதும் இன்றியமையாததாகிறது. இவ்வகையில் மாயூரம் தெய்வத்தமிழ் மன்றத்தின் முயற்சியோடு தருமையில், தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானின் குருபூஜைத் திருநாளை ஒட்டி மூன்று நாட்களுக்கு ஒரு ஆலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பது இந்துசமய மக்களுக்குக் கடமை உணர்ச்சியை வற்புறுத்தி மகிழ்வூட்டும் என்று நம்புகின்றோம்.

ஆசாரிய ஆசிர்வாதம்

தென்பாண்டிநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து மதுரைச் சொக்கநாதப்பெருமானை ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாகப்பெற்று, கமலை ஞானப்பிரகாச தேசிகரின் ஞானோபதேசத்தால் தருமையில் நானூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் திருமடங்கண்ட பேரருளாளர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். சைவமும் – தமிழும் தழைத்தினிதோங்கப் பாடுபட்டுவரும் தருமையாதீனத்தில் ஜூன் 3, 4, 5 ஆகிய மூன்று நாட்களும் சமயச்சார்பு மன்றங்களை ஒருங்கிணைத்தல்பற்றிய ஆலோசனைக் கூட்டம் நிகழவிருப்பது பெரிதும் பொருத்தமானதாகும்.

ஆசாரிய ஆசீர்வாதத்தோடு குருபூஜைத் திருநாட்களில் நடைபெறவிருக்கும் இவ்வாய்வரங்கின் பயனாகத் தமிழகத்தில் உள்ள சமயச் சார்புடைய மன்றங்கள் ஒருங்கிணைவது பெரும்பயன் விளைக்க வல்லது. சமயப்பணிகளை ஒருமுகப்படுத்தி ஒரு நல்ல தலைமையின் கீழ்க் கொண்டுவருவதன்மூலம் சமயத்துறை வளர்ச்சிக்கு ஊறுவரும் போதெல்லாம் அதைத் தடுத்து நிறுத்தவும், சமய வளர்ச்சிக்காக ஆக்கபூர்வமான வழிகாணவும் இயலும் என்பதே இவற்றை இணைப்பதன் நோக்கமாகும்.

எண்ணம் வளர்க

சமயத்துறையில் நாட்டம் இல்லாதவர் என்பார் பெரும்பாலும் எவரும் இலர். சமய வாழ்வுதான் பண்பாட்டுக்கும் மனவளர்ச்சிக்கும் வித்திடுவது. இவ்வாழ்வின் அடித்தளங்களாக விளங்கும் திருக்கோயில் மற்றும் திருமடங்கள் சமய மன்றங்களின் வளர்ச்சியில் அன்பர்கள் தங்களை இணைத்துக்கொள்ளவேண்டும். அவரவரும் மனப்பூர்வமான நாட்டங்கொள்வதோடு, இவற்றின் வளர்ச்சிக்காகத் தங்கள் வருவாயில் ஒரு சிறு பகுதியை வழங்கும் எண்ணத்தையும் பிற சமயத்தினரைப்போல வளர்த்துக்கொள்வது இன்றியமையாதது. இந்த நல்லவாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு சமய வளர்ச்சியில் ஈடுபாடுகொண்ட அனைவரும் ஒருங்கிணைந்து நாட்டுக்கும் – சமூகத்திற்கும் சிறப்பாகச் சமயத்திற்கும் ஊற்றமான வகையில் தொண்டாற்றிச் சிறந்துவாழ வேண்டுகின்றோம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

சீகாழி அருள்மிகு சட்டைநாதசுவாமி திருக்கோயிலில்

நடைபெற்ற திருமுலைப்பால் உற்சவத்தில்

பாகனேரி, திரு. ஆர். சம்பந்தம் பிள்ளை அவர்களுக்குத்

"திருமுறைக் கலாநிதி" எனும் பட்டம் அளித்து

வழங்கியருளிய

ஆசியுரை

21—4—80

"என்றும் அடியவர் உள்ளத்திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்துதிப்பன நல்லசங்கத்
தோன்றும் புலவர்கள் யாப்புக்குரியன ஒண்கவியைப்
பொன்றும் கவுணியன் சைவசிகாமணி பொன்னடியே."

ஓங்கு புகழ்கொண்ட நான்கு நாடுகள்

இன்று திருஞானசம்பந்தப்பெருமான் ஞானப்பால் உண்ட ஐதிகத்திருநாள். இந்த நன்னாளில் கலந்துகொள்ளப் பாண்டியநாட்டிலிருந்து மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீன மகாசந்நிதானமவர்களும், தொண்டைநாட்டிலிருந்து காஞ்சிபுரம் ஞானப்பிரகாசராதீன மகாசந்நிதானமவர்களும் இங்கேவந்திருக்கிறார்கள். பாண்டியநாடும் தொண்டைநாடும், என்றும் சோழநாட்டோடுதொடர்புடையதாகவே இருந்துவந்துள்ளன என்பதனை வரலாறு விளக்கிக்கூறுகிறது.

ஔவையார் பாடிய தனிப்பாடல் ஒன்று எந்த எந்த நாடு எவ்வெவ்வற்றிற்குச் சிறந்தது என்பதனைக் கூறுகின்றது. அப்பாடலைக் காண்போம்.

"வேழமுடைத்து மலைநாடு மேதக்க
சோழவள நாடு சோறுடைத்துப் — பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து"

சோறு எது ?

'சோழவள நாடு சோறுடைத்து' என்பது எல்லோரும் அடிக்கடி கூறிவருவதாகும். 'சோறு' என்னும் சொல்லுக்கு உணவு என்று மட்டும் பொருள் இல்லை 'வீடுபேறு' என்னும் பொருளும் அதற்கு உள்ளார்ந்தபொருளாக அமைந்துள்ளதை ஆழ்ந்து சிந்தித்துப்பார்க்கப் புலனாகும். சோறு எனும் சொல் வெறும் அரிசி உணவைமட்டும் குறிக்காமல் பிறதுணை உணவாகிய காய்கறிகளையும் சேர்த்துக் குறிக்கிறது. பொதுவாகச் சுவைக்கத்தக்க பொருள்கள் - இன்பம் பயக்கும் பொருள்கள் எல்லாவற்றையும் குறிக்கும் பொதுச் சொல்லே 'சோறு' என்பதாகும். இவ்வுலகில் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலன்களின் அனுபவ நிலையினைச் சிற்றின்பம் என்றும், இவைகளைக் கடந்து வென்றநிலையில் இறைவனின் திருவடி நீழலை அடைந்து அமைதியுறும் நிலையினைப் பேரின்பம் என்றும் சான்றோர் கூறுவர். சோறு என்பதற்கு இன்பம் பயக்கும் பொருள் என்று பொருள்கொண்டு சோழநாடு உலகியலின்பங்களைக் கொண்டிருந்ததலோடு பேரின்ப நிலையாகிய வீட்டு நெறியையும் தக்கசமயத்தில் சரியான முறையில் பரப்பிய பெருமையும் உடையது என்று உணர வேண்டும். இக்கருத்திலேதான் 'சோழநாடு சோறு உடைத்து' என்றனர். மேலும் கண்டு, கேட்டு, உண்டு உயிர்த்து, உற்று அறியும் இன்பமெல்லாம் உண்ட பின்னரே நிகழும் என்னும் முதன்மையும் உணரத்தக்கது.

இப்பியும் வேழமும் இயல்புடைய சான்றோரும்

"பாண்டியநாடு முத்துடைத்து" என்பர். முத்தும் ஒருவகையில் காணும் இன்பமும், ஊற்றின்பமும் உடையதேயாயினும்'முத்தி' எனும் வீடுபேற்றுடன் தொடர்புடையதே எனலாம். 'முத்தி' எனும்சொல்லே பின்னர் முத்துஎன்று ஆகியிருக்க வேண்டும். ஏனெனில் இப்பியின் வயிற்றிலிருந்து விடுதலைபெற்று வெளிவருவது முத்து என்பதனால் இவ்வுலகவாழ்விலிருந்து விடுதலைபெற்று முத்திஅடைகின்ற ஆன்மாவைப் போன்று முத்தும் அமைந்திருக்கிறது.

'தொண்டைநாடு சான்றோருடைத்து' என்பதும் ஒப்புநோக்கற் பாலதாகும். சான்றோர்கள் முத்தி எனும் வீடுபேற்றினை விளக்கமாகப் பேசியும் அங்ஙனமே நடந்து காட்டியும் நடக்கத்தூண்டியும் வாழ்ப வர்கள் ஆதலின் அவர்கள் வாழ்வும் இங்கே சிந்திக்கத்தக்கதாகும்.

'சேரநாடு வேழம் உடைத்து' எனும் வரியில் வேழம் என்பது யானையைக் குறிக்கும். 'வேழமுகத்து விநாயகனைத் தொழ, வாழ்வு மிகுத்துவரும்' என்பர்பெரியோர். மிக்கவாழ்வு என்பது பெருவாழ்வு; அதாவது பேரின்பவாழ்வாகிய வீடுபேற்றை உணர்த்தும். எனவே எல்லாவற்றிற்கும் முதலில் விநாயகரை வழிபட்டே தொடங்கவேண் டும் என்றகுறிப்பும் தோன்றவே வேழமுடைய மலைநாட்டை முதலில் குறிப்பிட்டார்போலும். மேலும் வேழமுகத்து விநாயகனே ஔவை யாரைக் கயிலையில் சேர்த்தவர். இன்ன பிறகுறிப்புக்களால் வேழமும் முத்திப்பேற்றைக் குறிப்பது உணரலாம்.

ஆகவே நான்கு நாடுகளும் உயிர்கட்கு இம்மைப்பயனாகிய இன்பம் நல்குவதோடு, அம்மைப்பயனாகிய முத்திப்பேற்றுக்கும் வழி வகுக்கும் சிறப்புடையனவாய்த் திகழ்கின்றன என்னும் உள்ளுறைப் பொருள் தெளிவாக விளங்குகிறது. "சோறிட்டுச் சோறு பெற்றார்". என்றும், "பாதகமே சோறு பற்றினவா தோள்நோக்கம்" என்றும் அருளாளர்கள் சோறு என்பதனை இணைத்து முத்தியை விளக்கியிருத் தலையும் சிந்தித்துப்பார்த்தல்வேண்டும்.

மதுரையைமீட்ட மாண்புடைய பிள்ளை

சேர, சோழ, பாண்டிய, தொண்டைநாடுகளுள் சோழநாட்டிற்குத் தனிச் சிறப்பு உண்டு. இங்கே சீகாழியில் அவதாரம் செய்த ஞான சம்பந்தப்பெருமான் பாண்டிநாட்டில் பிறசமய ஆதிக்கம் தலைவிரித் தாடியபொழுது அங்கேசென்று அதனை அடக்கிச் சைவசமயத்தைநிலை நாட்டினார். சோழநாட்டிலிருந்து ஒரு திருஞானசம்பந்தர் பாண்டிநாடு சென்று சைவசமயத்தை நிலைநாட்டி, திருமடத்தினை நிறுவியருளினர். அதுதான் மதுரையில் திருஞானசம்பந்தர் ஆதீனமாகத் திகழ்கிறது. அதேபோல் பாண்டிநாடும் ஒரு ஞானசம்பந்தரைக் சோழநாட்டிற்கு அளித்து ஒரு திருமடத்தினை நிறுவச்செய்தது. இதுதான் ஸ்ரீ குரு ஞானசம்பந்தரால் நிறுவப்பெற்ற தருமையாதீனத் திருமடமாகத் திகழ்கிறது. மேலும் சோழநாட்டு ஞானசம்பந்தர் மதுரைசென்று

சைவசமயத்தைப் பாதுகாத்ததற்குக் காரணமாக இருந்ததும் ஒரு சோழநாட்டு மணிமுடிச்சோழன் மகளாகிய மங்கையர்க்கரசியார்தான் என்பதையும் உணர்கிறபோது உவகைமீதூர்கிறது. இருநாட்டிற்கும் இருஞானசம்பந்தரைப் பரிவர்த்தனைமுறையில் அருளிய திருவருளை நினைகிறபோது நெஞ்சுநெகிழ்கிறது. சோழநாட்டில் பிறசமயத்தாரின் ஆதிக்கம் மற்றைய நாடுகளைநோக்கக் குறைவாகவே இருந்தது. அனபாயச்சோழனின் மனம் புறச்சமயத்தில் ஈடுபட்டபொழுது தொண்டைநாட்டுச் சேக்கிழார் தம் பெரியபுராணத் திறத்தாலேயே மாற்றி மாண்புறுத்தினர்.

சோழவளநாடும் சோர்விலாத் தொண்டைநாடும்

தொண்டைநாட்டை எடுத்துக்கொண்டால் "தீய என்பன கனவிலும் நினைவிலாச்சிந்தைத் தூய மாந்தர்வாழ் தொண்டைநாடு" என்று சேக்கிழார் பாராட்டும் இயல்பையுடையது. இந்நாடும் சோழநாட்டோடு சைவத்தொடர்புடையது என்பதற்கு ஒரு வரலாறு உள்ளது.

மாயூரத்திற்கு அருகிலுள்ள சித்தர்காட்டில் சிற்றம்பல நாடிகள் என்று ஒரு மகான் வாழ்ந்துவந்தார். அவருக்குச் சிஷ்யர்களாக இருந்தவர்களில் ஞானப்பிரகாசர் என்பவரும் ஒருவராவர். இவரும் கமலை ஞானப்பிரகாசரும் வேறுவேறானவர்கள். இந்தச் சிற்றம்பலநாடிகளின் சிஷ்யரான ஞானப்பிரகாசரால் தோற்றுவிக்கப் பெற்ற திருமடமே காஞ்சிபுரத்தில் உள்ள தொண்டைமண்டல ஆதீனம் ஞானப்பிரகாசர் திருமடம் என்பது இங்கே சிந்திக்கத்தக்க தாகும். எனவே சோழநாடு தொண்டைநாட்டிற்கும் ஒரு ஞானப் பிரகாசரை அனுப்பி ஞானப்பயிர் வளர்க்க உதவிசெய்துள்ளதை அறியலாம். மேலும் இன்று வருகைபுரிந்துள்ள மதுரை, காஞ்சி மகாசந்நிதானங்கள் இருவரும் தருமையாதீன ஞானப்பண்ணையில் பயின்றவர்களே. அன்று திருவருளால் தொடங்கிய ஞானத்தொடர்பு இன்றும் திருவருளால் தொடர்கிறதை எண்ணும்போது இறையருளை வியக்காமல் இருக்க இயலுமா! இங்ஙனம் பாண்டிநாடும் தொண்டை நாடும் என்றும் சோழநன்னாட்டுடன் தொடர்புடையனவாகவே இருந்து வருகின்றன.

விழாக்கள் ஏன் ?

திருஞானசம்பந்தப்பெருமான் ஞானப்பாலுண்ட இந்த ஐதிகத் திருநாளை ஆண்டுதோறும் கொண்டாடிவருகின்றோம். இங்ஙனம் ஆண்டுதோறும் கொண்டாடவேண்டுமா என்று சிந்திக்கவேண்டும்.

ஞானசம்பந்தர் தம் அருள்வாழ்க்கையில் பல்வேறு இன்னல்கள் வந்தன. சில நேரங்களில் இன்னல்களை நாடியே இவரும் சென்றார். திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்குப் புறப்படும் பொழுது அப்பரடிகளின் எச்சரிக்கையை மனம்கொண்டு இன்னல்களையும் நெஞ்சில் நிறுத்திச் சென்றார் என்று வரலாறு கூறுகிறது. இங்ஙனம் சென்ற அவ்வருளாளரின் பக்தி உறைப்பினையும் கடமை உணர்வையும் சிந்தித்தல் வேண்டும் கடமை உணர்வு மேலிடும்போது துன்ப உணர்வு கடமை உணர்வில் மறைத்துவிடுகிறது. இதனை ஞானசம்பந்தர் வாழ்வில் காணுகிறோம். திருவள்ளுவர்,

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்"

என்றும்

"இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்"

என்றும் கூறும் அருங்குறள்களின் கருத்துக்களை அருளாளர்களின் வாழ்வில்தான் காணமுடிகின்றன. துன்பங்கள் தாக்கிய பொழுது துவண்டுபோகாமலும்இன்பங்களை எதிர்நோக்கி இளைத்துப்போகாமலும் இருப்பார் எவரோ அவரே, தன்கேளிரைக் காக்கும் பெருந்தகுதி கொண்டோராவர் எனும் இலக்கணத்திற்கு ஞானசம்பந்தரின் அருள் வாழ்வு, பொருந்திய இலக்கியமாக விளங்குவதனை உணரலாம்.

இதுபோன்ற நற்சிந்தனை கொண்டு வாழ்வில் உயரவும் அதன் வழிச் சிறப்பெய்தவும் தன்னை வளர்த்துக்கொள்ளவுமே இத்தகைய விழாக்கள் ஆண்டுதோறும் தேவைப்படுகின்றன. அதன்வழி நிகழ்ந்தும் வருகின்றன.

என்றும் நிலைத்தது எது?

நம்பியாண்டார் நம்பிகள் "என்றும் அடியவர் உள்ளத்திருப்பன" எனும் பாடலில் ஞானசம்பந்தப் பெருமானின் பொன்னடிகள் என்ன என்ன செய்யும் என்று கூறுகின்றார். உலகியலில், கொள்கையும் அதனைத்தாங்கும் பல்வேறு குழுக்களும் நாளுக்குநாள் தேய்ந்து அழிந்துவருகின்றன. ஆனால் இன்று நேற்று என்றில்லாமல் என்றும் நிலைத்து நிற்கக் கூடியனவும், நல்லமலர்களைக்கொண்டு தூவித் துதிப்பதற்குரியனவும், கலியின்வன்மையை அழிக்கும் ஆற்றலுடையனவும் ஆயது எது எனில் ஞானசம்பந்தரின் பொன்னடிகளே என்று விளக்குகின்றார்.

இத்தகைய அருள்நலம் பழுத்த அருளாளர் ஞானப்பாலுண்ட ஐதிகத் திருநாளில் பல ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த ஒரு ஓதுவாருக்குத் 'திருமுறைக் கலாநிதி' எனும் பட்டம் அளித்துப் பண முடிப்புவழங்கிச் சிறப்பிப்பது கயிலைக்குருமணியின் காலந்தொட்டு வழக்கமாக உள்ளது. அங்ஙனம் இவ்விழாவில் பாகனேரி. திரு. ஆர். சம்பந்தம் பிள்ளை எனும் ஓதுவாருக்குத் 'திருமுறைக்கலாநிதி' எனும் பட்டமும் பண முடிப்பும் (1001) திருவருள் வழியே வழங்குகின்றோம். திரு. சம்பந்தம் பிள்ளை வயதிலும் திருமுறை ஓதும் அனுபவத்திலும் முதிர்ந்தவர்; தொண்டுகள் பல செய்து வருபவர்.

இன்று பட்டம் பெறும் ஓதுவாரும், இவ்விழாவில் பக்தி சிரத்தையோடு கலந்து கொள்ளும் மெய்யன்பர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடுவாழச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழிய திருமுறை!

வளர்க நல் ஓதுவார்!!

உ

தருமையாதீனத்திற்குச் சொந்தமான

குமரக்கட்டளை

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், மாயூரம்.

திருவிளக்கு அறக்கட்டளை

அறிவிப்பு

விளக்கினூர் பெற்றஇன்பம் மெழுக்கினல் பதிற்றியாகும்
துளக்கின் நன் மலர்தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ்சொன்னூர்க்கு அடிகள்தாம் அருளுமாறே.

மாயூரம் — குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கலியுகவரதராக — கண்கண்ட தெய்வமாகக் காட்சியளித்துக் கருணை பாலித்தருள்கிறர். மாதந்தோறும் ஒவ்வொரு கார்த்திகைத் திருநட்சத்திரத்தன்றும் நடைபெறும் விசேட ஆராதனைகளைப் பக்தர்கள் தங்கள் உபயமாக ஏற்று ஆர்வத்துடன் செய்து அருள்பெறுகின்றனர். இப்பெருமானுக்குக் கந்தசஷ்டித்திருநாள் மிகச் சிறப்பாக நிகழ்கிறது. அந்த ஆறுநாட்களிலும் நடைபெறும் லட்சார்ச்சனையும் பக்தர்களின் உபயமாகவே நடைபெற்றுவருகின்றன. இப்பெருமான் திருவருளில் ஈடுபட்ட திருத்தருமையாதீனம் இருபத்தைந்தாவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் புதிதாகத் தங்கக்கவசம் செய்வித்து அவ்வப் போது அணிவித்து மகிழ்ந்தார்கள்.

திருவிளக்கின் பயன் :

திருக்கோயிலில் அலகிட்டுத் தூய்மைசெய்வோர் மிக்க பலன் எய்துவர் ; மெழுகுவோர் அதைவிடப் பத்துமடங்கு பலனை அடைவர் ; நறுமணமுள்ளமலர்களை எடுத்துத் திருமாலைகட்டி அளிப்போர் விண்ணுலகு ஆள்வர் ; திருவிளக்குப் பணிசெய்வோர் மேலான ஞானமார்க்கத்தில் செல்லத்தக்க அறிவைப்பெறுவர் ; தோத்திரங்கள்

சொல்லித் துதித்து வழிபடுவோர் அடையும் பயன்களுக்கு அளவே இல்லை என்று திருநாவுக்கரசு சுவாமிகள் அருளுகின்றார்கள்.

இத்திருக்கோயிலில் திருவிளக்குப்பணி ஆண்டுமுழுதும் சிறப்பாக நிகழ இவ்வறக்கட்டளையை நிறுவி, தங்களது ஜன்மநக்ஷத்திர நன்னாளன்று (9—12—79) தருமையாதீனம் இருபத்தாருவது குரு மகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** ரூபாய் இருநூற்றுஐம்பத்தொன்று வழங்கித் தொடங்கி வைத்தார்கள். அன்று முதல் பக்தர்கள் பலர் தாமாகவே விரும்பி ஒவ்வொருவரும் ரூ. 251—00 அளித்து இவ்வறக்கட்டளையில் பங்கு கொள்கின்றனர்.

அறக்கட்டளை அமைப்பு :

அன்பர்கள் தங்களது பிறந்தநாள், திருமணநாள், தங்கள் முன்னோர்களின் நினைவுநாள்போன்ற அவரவர்கள் விரும்பும் யாதேனும் ஒருநாளில் ஆண்டுக்கொருமுறை இத்திருக்கோயிலில் திருவிளக்கிட இவ்வறக்கட்டளையினை அமைத்துக்கொள்ளலாம். இதில் பங்கு கொண்டு நலம்பெற விரும்புவோர் ரூபாய் இருநூற்றைம்பத்தொன்று இத்தேவஸ்தானத்தில் நேரிலோ அல்லது காசோலைவாயிலாகவோ செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளவேண்டும். இத்தொகையினை வைப்பு நிதியாகக்கொண்டு ஆண்டுதோறும் அதில்வரும் வட்டித் தொகையிலிருந்து, காணிக்கை செலுத்துவோர் குறிப்பிடும் நாளில் திருவிளக்கிட்டு, பெருமானுக்கு அருச்சனை செய்து நேரில் வருவோருக்கு நேரிலும், வர இயலாதோருக்குத் தபாலிலும் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

வேண்டுகோள் :

வேண்டிய வரங்களை வேண்டியபடியே அளிக்கும் மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ வள்ளிதேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருவிளக்கு அறக்கட்டளையில் அன்பர்கள் பங்கு கொண்டு மெய்ந்நெறியாகிய ஞானமும் நிறைசெல்வமும் நீளாயுளும் பெற்று உய்வார்களாக.

திருமீயச்சூர்,
திருமீயச்சூர்இளங்கோயில் தலச்சிறப்பு

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம், ஏ.,

இத்தலத்திருக்கோயில்கள் திருப்புகலூர் வேளாகுரிச்சி ஆதீனத்துக்குச் சொந்தமானவை. திருமீயச்சூரில் இவ்விரண்டு கோயில்களும் உள்ளன. சோழவளநாட்டுக் காவிரித்தென்கரைத்தலங்களில் 56, 57 ஆவது தலங்களாக இவை விளங்குகின்றன.

வழி : தஞ்சைமாவட்டம் நன்னிலம்வட்டத்தில் பேரளம் புகைவண்டி நிலையத்துக்கு மேற்கே $1\frac{1}{2}$ கி. மீ. தூரத்தில் திருமீயச்சூர் உள்ளது. பேரளம் பேருந்துநிலையத்திலிருந்து சென்ருல் மேற்கே 2. கி. மீ தூரம் உள்ளது. பேரளம், மாயூரம் திருவாரூர்ச்சாலையில் விளங்கும் நகரம். மாயூரம், கும்பகோணம், காரைக்கால், திருவாரூர் ஆகிய இடங்களிலிருந்து பேரளம்வரப் பேருந்துகள் பலவும் உள்ளன.

தலப்பெருமை திருமீயச்சூர்த் திருக்கோயிலும், திருமீயச்சூர் இளங்கோயிலும் ஒரே ஆலயத்துள் விளங்கும் திருக்கோயில்கள். திருமீயச்சூர் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றையும், திருமீயச்சூர்இளங்கோயில் திருநாவுக்கரசர் அருளிய தேவாரத் திருப்பதிகம் ஒன்றையும் பெற்று விளங்குவன.

திருமீயச்சூர்க்கோயில் மூலவிமானம் தனிக்கலையழகோடு திகழ்கிறது. சோழர்காலத் திருப்பணியைப்பெற்ற திருக்கோயில் இது. இத்திருக்கோயிலில் உள்ள பஞ்சபூதலிங்கங்களும், அஷ்டதிக்பாலகர்கள், சப்தமாதர்கள் பூசித்த லிங்கங்களும் தரிசிக்கத்தக்கவை. க்ஷேத்திரபுராணேசுவரர், கல்யாணசுந்தரர், துர்க்கை, சூரியன், திருவுலாநாயகர்களில் சோமாஸ்கந்தர், வில்லேந்தியமுருகன் ஆகியோர் திருவுருவங்கள் கலையழகு வாய்ந்தவை.

இக்கோயிலின் வடக்குப் பிராகாரத்தில் இளங்கோயில் உள்ளது. மீயச்சூரில் இருந்த இரண்டுதிருக்கோயில்களில் மேகநாதர் கோயில் பெரியகோயிலாக இருந்தலைக்கருதிச் சகலபுவனேசுவரர் கோயில் இளங்கோயில் எனப்பட்டது. ஒரு கோயிலைத் திருத்திக்கட்டத்

தொடங்குமுன் இறைவனைப் பிறிதொரு சிறியகோயிலமைத்துப் பிரதிட்டைசெய்வது மறைமொழிவிதி. அவ்விதிப்படி மேகநாதர்கோயில் திருப்பணியின்போது இக்கோயில் இளங்கோயிலாக (பாலாலயம்)க் கட்டப்பட்டது எனக் கூறுவர். இறைவன் இறைவி திருப்பெயர்கள் வேவ்வேருயிருத்தலாலும். மேகநாதர்கோயிலுக்குரிய அம்மை இருந்த கோலத்திலும் சகல புவனேசுவரர்கோயிலம்பிகை நின்றதிருக்கோலத்திலும் விளங்குதலாலும் இரண்டு கோயில்களும் வேறுவேருனவை என்பது தெளிவு, இளங்கோயில் காளிதேவி பூசித்த சிறப்புடையது.

தமிழகத்தில் விளங்கும் கோயில்களிற்சில பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில். மணிக்கோயில், ஆலக்கோயில் என்னும் சிறப்புப்பெயர்களைப் பெற்று விளங்குவதைக் காணலாம். நன்னிலம் கோயில் பெருங்கோயில் எனவும், மீயச்சூரில் உள்ள கோயில் இளங்கோயில் எனவும், வைகல்முதலியதலங்களில் கோச்செங்கட்சோழனுல் கட்டப்பெற்றவை மாடக்கோயில்கள் எனவும், கடம்பூர்க்கோயில் கரக்கோயில் எனவும்' வினநகர்க்கோயில் ஞாழற்கோயில் எனவும், கருப்பறியலூர்க்கோயில் கொகுடிக்கோயில் எனவும், திருக்கச்சூரில் உள்ளது ஆலக்கோயில் எனவும் வழங்கக் காணலாம். திருமீயச்சூரில் இருந்த சிறிய கோயில் இளங்கோயில் என்று கூறப்பட்டது என்பதைத் தேவாரச்சான்றுகளாலும் நாம் அறியலாம்.

> " நெஞ்சம் வாழி நினைந்திரு மீயச்சூர்
> எந்தமை உடையார் இளங்கோயிலே "

என்பது அப்பர்திருமொழி

இத்தலத்திலுள்ள அருள்மிகு மேகநாதர்கோயில் சூரியன்பூசித்து அருள்பெற்ற சிறப்புடையது. தீர்த்தமும் சூரியபுஷ்கரணி என்றே அழைக்கப்படுகிறது. சித்திரை 21 முதல் 27 வரை உள்ள நாட்களில் காலைவேளையில் சூரியபூசை நடைபெறுகிறது.

மூர்த்திகள் : இறைவர் திருப்பெயர் அருள்மிகு மேகநாதர். முயற்சிநாதர் எனவும் வழங்கப்பெறுகிருர். இறைவி திருப்பெயர் அருள்மிகு சௌந்தரநாயகி. சுந்தரநாயகி எனவும், லலிதாம்பாள் எனவும் வழங்கப்படுகிருர்.

இளங்கோயில் இறைவர் திருப்பெயர் அருள்மிகு சகலபுவனேசுவரர். இறைவி திருப்பெயர் மேகலாம்பாள்.

தலமரம் வில்வம். தீர்த்தம் சூரியபுஷ்கரணி, கங்காகூபம். இரதசப்தமிநாளில் சூரியபுஷ்கரணியில் நீராடி வழிபடுவோர் எல்லா நலங்களும் பெறுவர்.

இத்தலத்தின் வடக்குப்பிராகாரத்தில் சுவாமிகோயில் கோஷ்டத்திலுள்ள கல்யாணசுந்தரரை மணமாகாத பெண்கள் பிரார்த்தனை செய்துகொண்டு மாலைசார்த்தி அர்ச்சித்து வழிபட்டு விரைவில் திருமணம் நிறைவேறப் பெறுகின்றனர்.

கோயிலமைப்பு : திருமீயச்சூர் பெரியகிராமம். ஊர் நான்கு திருவீதிகளும் அழகுற அமைந்துள்ளன. ஐந்துநிலைக் கோபுரத்தைக் கடந்தவுடன் வெளிப்பிராகாரத்தை அடையலாம். துவஜஸ்தம்பம் நந்தி பலிபீடங்களைக்கடந்து இரண்டாம் கோபுரவாயிலை அடையலாம். கோபுரவாயிலில் துவாரபாலகர் சுதைச்சிற்பங்கள் உள்ளன. இரண்டாம் கோபுரம் மூன்று நிலைகளை உடையது. இரண்டாம் கோபுரவாயிலைக்கடந்து உள்ளே சென்றால் முதற்பிராகாரம். மகாமண்டபத்தின்வாயிலில் உள்ள சிறிய விநாயகரைக் கும்பிட்டு வலம் வருவோம்.

உட்பிராகாரத்தின் தென் திருமாளிகைப்பத்திமண்டபத்தில் நாகப் பிரதிட்டைகளை அடுத்து, சேக்கிழார் சமயாசாரியர் திருவுருவங்களும் பிராமி முதலிய சப்தமாதாக்கள் பூசித்த லிங்கங்களும் உள்ளன. மேற்குத் திருமாளிகைப்பத்தி மண்டபத்தில் சந்திரன், அக்னி, எமன் பூசித்த லிங்கங்கள் உள்ளன. அடுத்து முருகன் கோயில் உள்ளது. அடுத்து நிருதி, வருணன் பூசித்த இலிங்கங்கள் உள்ளன. அடுத்து ஆகாசலிங்கம் உள்ளது. இந்திரன் ஈசானன் முதலியோர் பூசித்த லிங்கங்கள் உள்ளன. வடமேற்குமண்டபத்தில் கஜலட்சுமி விளங்குகின்றார். வடக்குத் திருமாளிகைப்பத்தியில் அப்புலிங்கம் உள்ளது.

பெரியகோயிலாகிய ஸ்ரீ மேகநாதர்கோயிலும் இளங்கோயிலாகிய ஸ்ரீசகலபுவனேசுவரர்கோயிலும் அடுத்தடுத்து உள்ளன. ஸ்ரீமேகநாதர் கோயில் இராஜேந்திரசோழன் செம்பியன்மாதேவி முதலிய சோழர் காலத்திருப்பணியைப்பெற்ற பெருஞ்சிறப்புடையது. கர்ப்பக்கிருகம் கஜப்பிருஷ்ட விமான அமைப்புடையது. மூன்றுகலசங்கள் வரிசையாய் உள்ளன.

பெரியகோயில் மண்டபத்தின் கோஷ்டங்களில் தெற்கே விநாயகரின் நின்றதிருக்கோலத்தைத் தரிசிக்கலாம். அடுத்து க்ஷேத்திர புவனேசுவரர் திருவுருவம் உள்ளது. இம்மூர்த்தி பேரழகோடு திகழ்வது. அடுத்து தக்ஷிணாமூர்த்தி, மேற்கே லிங்கோத்பவர், வடக்கே பிர்மா, சந்திரசேகரர், கல்யாணசுந்தரேசுரர், துர்க்கை, பிக்ஷாடனர் விளங்குகின்றனர்.

ஸ்ரீ சகலபுவனேசுவரர் ஆலயத்தின் தென்பால் தக்ஷிணாமூர்த்தி, மேற்கே மகாவிஷ்ணு, வடக்கே பிர்மா, சதுர்முக சண்டேசுவரர் உள்ளனர்.

பிராகாரத்தில் தெற்கே தேயுலிங்கமும் அடுத்து தலவிநாயகர் கோயிலும் உள்ளன. வடக்கே ஸ்ரீ அருணாசலேசுவரர் சண்டேசுரர் கோயில்கள் உள்ளன. நடராசசபை உள்ளது.

கிழக்குத் திருமாளிகைப்பத்தியில் பைரவர், சூரியன், ஆகாய லிங்கம் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

கோயிலை வலம்வந்து ஸ்ரீ மேகநாதர்கோயில் வாயிலை அடைந்த வுடன் முன்புறம் மகாமண்டபம் உள்ளது. அடுத்துஸ்நபனமண்டபம். இம்மண்டபத்தின் வடபால் திருவுலாப்போதும் பஞ்சமூர்த்திகளும் உள்ளனர். தென்பால் சோமாஸ்கந்தர் விளங்குகின்றார். பிருதிவி லிங்கம் இம்மண்டபத்திலுள்ளது.

அர்த்தமண்டபத்திலுள்ள நந்தி பலிபீடங்களைக்கடந்து கர்ப்பக் கிருகவாயிலை அடையலாம். இங்கு வாயிலின் இருபுறங்களிலும் துவாரகணபதிகள் உள்ளனர். சோழர்காலக் கலைப்பாணியோடு போதிகைத்தூண்கள் அர்த்தமண்டபத்தை அழகுசெய்கின்றன.

அர்த்தமண்டபத்தை அடுத்து அருள்மிகு மேகநாதர் விளங்கு கின்றார்.

காயச் செவ்விக் காமன் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையில் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரைத் தொழுது வினையை விட்டுமே.

என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தை ஓதி வழிபடலாம்.

முதற்பிராகாரத்தின் வடபால் சுவாமிதிருக்கோயிலுக்கு அருகில் விளங்கும் இளங்கோயிலைத் தரிசிக்கலாம். சுவாமி கிழக்குநோக்கியும், அம்பாள் தெற்குநோக்கியும் தனித்தனிக் கருவறையில் உள்ளனர்.

அருள்மிகு சகலபுவனேஸ்வரரை வழிபட்டு, அப்பர்பெருமான் பாடிய தேவாரப்பாடலை ஓதுவோம்.

பொன்னங் கொன்றையும் பூவணி மாலையும்
பின்னும் செஞ்சடை மேல்பிறை சூடிற்று
மின்னு மேகலையாளொடும் மீயச்சூர்
இன்ன நாள் அகலார் இளங்கோயிலே.

என்பது இத்திருக்கோயில் தேவாரம்.

வழிபட்டு வெளிப்பிராகாரத்திற்குவருவோம். அருள்மிகு சௌந்தரநாயகி லலிதாம்பிகை என்ற திருப்பெயரோடு அமர்ந்தநிலையில் அருள்விளங்கும் அம்பிகை இவர். இருந்தகோலத்தில் விளங்கும் இவ்வம்மை தனிச்சிறப்புடையவர். குறிப்பிடத்தக்க சக்தி பீடங்கள் பலவற்றுள் இக்கோயிலும் ஒன்று.

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேயழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

என்ற பாடலை ஓதி வழிபட்டுய்வோம்.

வெளிப்பிராகாரத்தில் திருவிழாநாட்களில் சுவாமி எழுந்தருளிப் புறப்பட்டு அருள்வழங்கும் பஞ்சமூர்த்தி மண்டபம் உள்ளது.

கோயிலின் வாயிலில் சூரியபுஷ்கரணிதீர்த்தமும், அதையடுத்துத் தேரடியும் உள்ளன.

புராண வரலாறு

காசிப முனிவருக்குக் கத்துரு, விநதை என இருமனைவியர் இருந்தனர். விநதை கத்துருவின் கொடுமைதாங்காது இத்தலத்தில் பெருமானைப் பூசித்தாள். விநதையின் பூசைக்கு மகிழ்ந்த பெருமான் அவளுக்குக்காட்சிதந்தார். பூசை வேளையில் இடையிடையே எழுந்து சென்றதால் அர்த்தபுத்திரரை அடைவாய் என்றும், அப்புதல்வன் மிக்கவிளக்கத்தோடு திகழ்வான் என்றும் அருள்புரிந்தார். காலப் போக்கில் கத்துரு விநதை இருவரும் கருவுற்றார்கள். கத்துரு நூறு பிள்ளைகளையும் விநதை அருணனையும் பெற்றனர். அருணன் சூரியனுடைய தேர்ச்சாரதியானான்.

திருக்கயிலை சென்றுசிவபெருமானைத் தரிசிக்கவிரும்பிய அருணன் தான் அங்கஹீனனாக இருந்ததால் மோகினி உருவமெடுத்துக் கயிலை சென்றான். இந்திரன் அம்மோகினியைக்கண்டு காதல்கொண்டு வாலியைப் பெற்றான். இதையறிந்த சூரியன் அருணனை மீண்டும் மோகினி உருவமெடுக்கும்படிக் கூறி அம்மோகினியைக்கூடிச் சுக்கிரீவனைப்பெற்றான்.

தன்னைத்தரிசிக்கவந்த அன்பனாகிய அருணனைக் கூடிய குற்றத்திற்காக இறைவன் இந்திரனை மகாபலியால் துயருறக் கடவனென்றும் சபித்தார். சாபநிவர்த்தி வேண்டிய சூரியனை நோக்கிப் பெருமான்

திருமீயச்சூருக்கு வந்து ஆறுமாத காலம் நம்மை வழிபட்டு அருள் பெறுக என்று கூறினர். சூரியனும் அவ்வாறே இத்தலத்திற்கு வந்து மேகநாதரை வழிபட்டு கருமை நீங்கிச் செவ்வொளிபெற்று இன்புற்ருன் என்பது தலபுராணத்தில் காணப்படும் செய்தியாகும்.

கோளபன் என்ற மன்னன் இத்தலத்துஇறைவனை வழிபட்டு அருள்பெற்றுள்ளான்.

கல்வெட்டு : இக் கோயிலில் ஏழு கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. பரகேசரி, இராசகேசரி சோழர்களில் நான்கும், பாண்டியர்களில் மூன்றும் ஆக ஏழு ஆகும். அவைகோயிலுக்கு நில தானம், விளக்குகளுக்கு நிலதானம் இவைகளைக் குறித்தவைகளாக இருக்கின்றன. பதின்மூன்ரும் ஆண்டுத் தொடக்கத்திலேயே பாண்டியராட்சி இங்கே வந்து விட்டது. இடைக்காலச் சோழர்களின் கல்வெட்டுக்கள் தெரியவில்லை.

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி,

வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

அடைக்கல மெனத்தொழும் கூடலை யாற்றூரில்
அருள்புரி குழலாம்பிகை
அல்லலகற் றிடுந்திரு எருக்கத்தம் புலியூர்
அமர்நீல மலர்க்கணம்மை
விடைக்கொடி யன்விரும் புந்திருத் தினைநகர்
மேவொப் பிலாநாயகி
விளங்கிடும் சோபுரம் சோபுர நாயகி
வேதவொலி மிகு அதிகைசிற்
றிடைக்கொடி யாள்திரி புரசுந்தரி எவரும்
இச்சைகொள் திருநாவலூர்
என்றுமுறை சுந்தர நாயகி முதுகுன்றத்
திலங்கும் பெரியநாயகி
படைக்கல மழுவன்மகி ழத்தழுவு பாவையே
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற் கருள் அன்னையே. (28)

கட்டுரை எண். 5.

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M. A., B. Lit.,
D. P. P. A., D. U. N. I. U.

அறிந்தேன் எவரும் அறியா மறையை ; அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே ; திருவே ! வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும்நரகுக்கு உறவாய மனிதரையே. 3

அ. அறிந்தேன் எவரும் அறியா மறையை

(1) சாதாரணமாக எவரும் எளிதில் அறியமுடியாத மறை பொருளாக அம்பிகை இருக்கிறார்.

(2) மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களுக்கும் அப்பாற்பட்டவளாக, விண்டுரைக்கவியலாத 'அதீத'மான நிலையில் அம்பிகை இருக்கிறாள்.

(3) மிகச்சிறந்த சாதகனுக்குக்கூட மின்னல்கொடி போன்ற காட்சியினை அளித்து மறைந்துவிடும் தன்மையளாய் இருக்கிறாள்.

(4) மனிதரோ, தேவரோ, முனிவரோ, மூவரோ யாவராலும் அறிய முடியாதவளாக இருப்பதால் எவரும் அறியா மறை என்றார்.

(5) மறை என்னும் வேதத்தின் உட்பொருள் அம்பிகை. அவ் வேதத்தின் உட்பொருள் எவராலும் அறியமுடியாத மறைப்பொருளாகவே இருக்கிறது

(6) ஸ்ரீவித்தை என்னும் அம்பிகையின் வழிபாட்டுமுறை, சாக்த ஆகமங்கள் ஆகியவை எவரும் முழுதும் அறிந்துகொள்ளமுடியாத மறைப்பொருளாகவே இருக்கின்றன. அவற்றின் உட்பொருள் அம்பிகையே. அவளருளால் அந்நெறியினை அறிந்தார் அபிராமி பட்டர்.

(7) குரு – சிஷ்ய முறையிலேயே ஸ்ரீ வித்தை உபதேசிக்கப் படுகிறது. அவ்வாறு இரகசியமாகப் பாதுகாக்கப்படுவதால் ஸ்ரீவித்தை

'குலஸ்திரி' அல்லது 'கற்புடைய பெண்' என்றே அழைக்கப்படுகிறது. - உபாசகர்களைத் தவிர பிறர் அறியாதவண்ணம் இருக்கும் அம்பிகை வழிபாட்டினை அபிராமிபட்டர் அறிந்தார்.

(8) அம்பிகையின் விச்வரூபத்தினை மும்மூர்த்திகளும் கண்ட விபரம் தேவிபாகவதத்தில் விளக்கப்படுகிறது. அவளது விச்வரூபமென்னும் பேருருவினை உண்மை நிலையினை அவர்களாலும் முற்றும் காண முடியவில்லை. எனவே 'எவரும் அறியா மறையை' என்றார்.

(9) எவரும் அறியாதவண்ணம் இருந்துகொண்டு, தான் எல்லாவற்றையும் அறிந்து வருகிறாள். எல்லாவற்றிற்கும் அவளே சாட்சி. ஆதலால் லலிதா சகஸ்ரநாமம் அவளை "விச்வ சாட்சிணி" என்று போற்றுகிறது.

(10) பசு கன்றை அறிகிறது; கன்றும் பசுவினை அறிகிறது. இது உலகவியல்பு. நாம் கடவுளை அறிய முடிவதில்லை. ஆனால் கடவுள் நம்மையெல்லாம் அறிகிறார்.

"தாய்தன்னை அறியாத கன்றில்லை, தன் கன்றை
யாயும் அறியும்; உலகின் தாய் ஆகில் ஐய!
நீயறிதி எப்பொருளும், அவையுன்னை நிலையறியா
மாயையிது என்கொலோ? வாராதே.வரவல்லாய்"

— கம்பராமாயணம்.

வங்கப்பெண்கவி டாருடட் "He Sees all below Himself Unseen" என்கிறார். அவ்வாறு அனைத்தும் அறியும் அன்னையினை, எவரும் அறியாத அம்பிகையினை அவளருளால் அறிந்தார் என்க.

(11) **சாட்சிக் கூண்டில் சந்தனமாரி** தஞ்சை மாவட்டம், மருத்தியூரில் கோயில் கொண்டிருக்கும் சந்தன மாரியம்மன் அந்தப் பகுதியில் மிகவும் பிரபலமான வரப்பிரஸாதி. எழுத்தறிவில்லா ஏழை விவசாயி ஒருவர் அவளிடம் அளவில்லா ஈடுபாடும் நம்பிக்கையும் வைத்திருந்தார். இன்னொருவரிடம் அவர் 500 ரூபாய் கடன் வாங்கியிருந்தார். சிலகாலம் கழித்துத் தனது ஆடு மாடுகளை விற்று 'பாவாடை' என்னும் பெயருடைய அந்தப் பக்தர் தன் கடனைத் தீர்த்துவிட்டார். கடன் கொடுத்தவர் அவரிடம் கையெழுத்து வாங்கித் தானே எழுதிக்கொண்ட பத்திரத்தைத் திருப்பித்தரவில்லை. அத்துடன் அப்பத்திரத்தை ஆதாரமாக வைத்து, பாவாடை கடனைத் தீர்க்கவில்லையென்று பொய்வழக்கும் தொடுத்து விட்டார்.

ஆங்கிலேய 'முன்சீப்' முன் கோர்ட்டுக்குச் செல்லவேண்டியதாயிற்று. விசாரணைநடத்தியபோது பாவாடையினால் தான்பணத்தைத்

திருப்பிக் கொடுத்ததற்குச் சரியான ஆதாரம் காட்டமுடியவில்லை. மற்றும் எழுத்தறிவில்லாத பாமரராகிய அவரால் நீதிமன்றத்தில் சரியாகப் பேசவும் இயலவில்லை. நீதிபதி "உனக்கு யாராவது சாட்சியுண்டா?" என்றார் "நமக்குச் சந்தனமாரிதான் சாட்சி" என்றார் ஏழை விவசாயி. அனைவரும் நகைத்தனர். முடிவேதும் எடுக்கப்படாமல் அன்றைய நீதிமன்றம் கலைந்தது.

வழக்கம்போல் மாலையில் சந்தன மாரியம்மன் கோயிலுக்குச் சென்றுவிட்டு வீட்டை அடைந்தார் பாவாடை.

அன்றிரவு ஆங்கிலேய 'முன்சீப்' கனவில் ஒரு நீதிமன்றக் காட்சி தோன்றியது! சாட்சிக் கூண்டில் மஞ்சள் பாவாடையுடுத்து, சிரித்தமுகத்துடன் ஒரு சிறுமி நின்றாள்! "நீ யாரம்மா?" என்றார் நீதிபதி. "நான்தான் சந்தனமாரியம்மன்; பாவாடைக்குச் சாட்சி சொல்ல வந்திருக்கிறேன்; பாவாடை ஆடுமாடுகளை விற்றுக் கடனைத் தீர்த்துவிட்டார்; பணம் கொடுத்தபொழுது இன்னின்ன பெயருடையவர்கள் அருகே இருந்தனர். அவர்களை விசாரித்து நியாயமாய்த் தீர்ப்பளி" என்று மீண்டும் முறுவலித்து மறைந்துவிட்டாள் அச்சிறுமி.

எவரும் அறியாமறையாய் இருந்து அனைத்தும் அறிந்த அம்பிகை கனவில் குறிப்பிட்டவருக்கெல்லாம் 'சம்மன்' அனுப்பப்பட்டது. பாவாடை நிரபராதி என்பது நிரூபணமாயிற்று "ஸ்ரீ சந்தனமாரியம்மன் சாட்சி கூறியபடி பாவாடை நிரபராதி என்று தீர்ப்பளிக்கிறோம்" என்றே அந்த ஆங்கிலேயர் தீர்ப்பெழுதினார். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த இச்சம்பவம், எங்கள் கிராமத்துப் பெரியோர்கள் அடிக்கடி கூறி மகிழும் நிகழ்ச்சியாகும்.

(12) காளிதாசன் காலத்தில் வேதியரொருவர் மிகச் சிறந்த அம்பிகை பக்தராய்த் திகழ்ந்தார். தேவியினை உரியமுறைப்படி யந்திரம், தந்திரம், மந்திரம் ஆகிய முறைகளில் பூஜிக்க விரும்பினார், ஆனால் அதற்கான வசதிகள் இல்லை. அதனால் அவர் அம்பிகைக்கு 'மானஸபூஜை' செய்வார். அதாவது, பூசலார் நாயனார் இறைவனுக்கு மனத்தில் கோயில் எழுப்பியதுபோல் அவர் மனத்தினிலேயே அம்பிகைக்கு அத்தனை பூஜையும் நிகழ்த்திவிடுவார் காலையில் நதிக்குச்சென்று நீராடிவிட்டு ஆசாரமாக நின்றுகொண்டு தனது மானஸ பூஜையினைத் துவக்குவார். கவி காளிதாசனும் தினசரி அங்குவருவான். நதியில் இறங்கிப் பல்துலக்குவான். வாயினைக் கொப்புளித்து அங்கேயே துப்புவான். அது வேதியரின் பூஜைக்கு இடையூறாக அமையும்.

"என்னடா இது! இவன் தினசரி இவ்வாறு நமது மானஸ பூஜைக்கும் தொல்லைகொடுக்கிறானே; தன்னைக் காளியின் பக்தன் என்று வேறு கூறிக்கொள்கிறானே;" என நினைப்பார் வேதியர்.

ஒருநாள், அவரது மானசபூஜையில் அம்பிகையினை முறைப்படி ஆசனத்தில் எழுந்தருளச்செய்து அலங்கரித்தார். அந்த மனவழி பாட்டில் ஒரு சிறு தவறுசெய்துவிட்டார். அதாவது, அம்பிகைக்கு மாலை அணிவித்துவிட்டுக் 'கிரீடம்' சாத்துவது வழக்கம். அதற்கு மாறாக அன்று மாலை சாத்தாமலேயே கிரீடம் சூட்டிவிட்டார். அவர் மனத்துக்குள் ஒரே போராட்டம். "அடடா, தவறு செய்துவிட்டோமே! இப்போது என்னசெய்வது? கிரீடத்தை எடுத்துவிட்டு மாலை சாத்துவதா? அல்லது மாலையின்றியே விட்டுவிடலாமா?" என்று குழம்பிக்கொண்டிருந்தார். அவ்வளவும் மானஸபூஜையினைக் குறித்துத்தான்.

அச்சமயம், வழக்கம்போல் பல்துலக்கிக்கொண்டிருந்த காளி தாசன் "சுவாமி, இதற்கு ஏன் இப்படிக் குழம்புகிறீர்கள்? அம்பிகை இதற்கெல்லாமா கோபப்பட்டுவிடுவாள்? கிரீடத்தை எடுத்துவிட்டு மாலை அணிவித்தாலும், அல்லது மாலை சாத்தாமலேயே இருந்தாலும் அவள் கோபிக்கமாட்டாள்" என்றான்.

வேதியருக்குத் தூக்கிவாரிப்போட்டது! "ஆஹா! இவன் பெற்றிருக்கும் அன்னையின் அருள்தான் என்னே? எவரும் அறியா வண்ணம் நான் இயற்றிய மானசபூஜையினையும் அதில் ஏற்பட்ட குழப்பத்தையும் தெளிவாக அறிந்து பேசுகிறானே" என்று எண்ணியவர் காளிதாசனின் காலடிகளைப் பற்றிக்கொண்டார். ஆகவே அன்னையின் அருள் எவரும் அறியாமறையினை அறியும் ஆற்றலை அளித்துவிடுகிறது. அபிராமிபட்டரும் அறிந்ததில் வியப்பில்லை.

(18) சர் ஜான் உட்ராப்பின் (Sir John Woodroff) வரலாற்றிலும் இத்தகையை நிகழ்ச்சியொன்று நடந்தது. அவர் வங்காள நீதிபதியாக இருந்தசமயம் ஒரு வழக்குத்தொடர்பாக அவரிடம் வந்த யோகீசுவரர் ஒருவர் உட்ராஃபின் நிபந்தனைப்படி மூடிய அறையில் தியானத்தில் அமர்ந்து, இங்கிலாந்தில் இருந்த அவரது குடும்பத்தினரின் நிலைகள் அனைத்தையும் அறிந்து கூறிய வரலாறு மிகவும் பிரபலமானதே!

இவ்வாறு அன்னையின் அருள் எவரும் அறியாமறை எதனையும் அறியவைக்கிறது.

ஆ. அறிந்துகொண்டு செறிந்தேன் உனது திருவடிக்கே!

(1) எவரும் அறியாமறையாகிய அன்னையினையே பரம்பொருள் என்று அறிந்து, தெளிந்து அவளது திருவடிகளையே புகலாகக் கொண்டார் அபிராமிபட்டர்.

(2) திருக்கடவூர்மக்கள் நினைத்ததுபோல் வேறு துர்த்தேவதைகளை வணங்கவில்லை என்பதனைத் தெளிவாக்க "உனதுதிருவடிக்கே" என்று 'ஏகார'த்துடன் கூறினர்.

(3) அவளருளால் அவளை அறிந்து அவளிடமே 'பூரண சரணாகதி' என்று அடைக்கலமாகப்புகுந்துவிட்டார். திருவடிக்கே செறிந்த அல்லது சரணமே கதி என்ற அவருக்கு ஏற்பட்ட சோதனையிலிருந்து காக்கவேண்டியது இனி அவளது கடமையாகிவிட்டது என்பது குறிப்பு.

இ. நின் அன்பர் பெருமை

(1) தொண்டர்தம் பெருமை அனைத்தினும் பெரிது என்ற ஔவையின் வாக்கிற்கு ஏற்ப அடியவர் பெருமை அளவிடற்கரியது. அதிலும், அம்பிகையின் அடியவர் பெருமை மிகச்சிறப்புடைத்தாகும். 'லலிதா சகஸ்ரநாம'த்தின் பலச்ருதி காண்டத்தில் அதுவெகுவாகப் பேசப்படுகிறது.

(2) அம்பிகையின் அடியார் அம்பிகையின் வடிவாகவே அல்லது ஸ்வரூபமாகவே ஆகின்றனர்.

(3) தேவி உபாஸகனிடம் மூவுலகும் மயங்கி அவன்பின் செல்கிறது.

(4) அன்னையின் அடியவரின் சத்துருவை சரபேஸ்வரர் நாசம் செய்கிறார். இரணியனைக் கொன்றபின் நரசிங்கர் உலகினைத் துன்புறுத்தியதாகவும், அந்த நரசிங்கத்தின் செருக்கினை அடக்கச் சிவனார் சரபமென்னும் (மனிதர் - மிருகம் - பறவை மூன்றும் கலந்த) உருவமெடுத்தார் என்றும் லிங்க புராணமும் காளிகா புராணமும் கூறும்.

(5) தேவியின் அடியவரைநோக்கி, 'ஆபிசாரகர்மா' என்னும் ஏவல், பில்லி, சூனிய மந்திரங்கள் செய்பவரைப் 'பிரத்தியங்கிரா' என்ற சரபரின் மனைவி அழிக்கிறாள்.

(6) அன்னையின் அடியவரைக் கொடுமையாகப் பார்ப்பவரை மார்த்தாண்ட பைரவர் என்பவர் கண்களைக் குருடாக்குகின்றார். "மார்த்தாண்டபைரவாராத்யா" என்பது சகஸ்ரநாமத்தில்ஒருநாமா.

(7) தேவி உபாஸகரின் சொத்தை அபகரிப்பவரை க்ஷேத்திர பாலர் அழிக்கிறார். "க்ஷேத்திரபால சமார்ச்சிதா" என்பது லலிதா சகஸ்ரநாமம்.

(8) அன்னையின் அடியவருடன் வீண்வாதம் புரிபவரை 'நகுலீச்வரி' வாக்ஸ்தம்பனம் செய்துவிடுகிறாள். அதாவது அவரது பேச்சாற்றலை நீக்குகிறாள்.

(9) அம்பிகையின் அடியவருக்கு அவள் இவ்வளவு பாதுகாப்பு அளித்திருந்தும் அவள் அன்பர் யாரையும் எதிரியாக எண்ணாது அனைத்துலகினையும் அன்னையின் வடிவாகவே காண்கின்றனர். "சர்வம் சக்திமயம் ஜகத்" என்பது அவர்களின் கொள்கை.

ஈ. அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சு

(1) அவ்வளவு சிறப்புடைய அடியவரின் பெருமையினையும் சிலர் எண்ணாது இகழ்கின்றனரே! அது அவர்களின் கருமவினையன்றி வேறென்ன?

(2) அன்னையின் ஞானமார்க்கத்தில் அபிராமிபட்டர் சென்றார். அவர்காலத்தில், அவர்பெருமையறியாத பிற வேதியர்கள் கரும படர்களாக விளங்கினர் அதாவது நித்யகர்மானுஷ்டானங்கள், சிரார்த்தம், தர்ப்பணம் முதலிய கருமங்களுக்கே முக்கியத்துவம் தந்துவந்தனர். அதில் தவறில்லை. ஆனால் அன்பர் பெருமை எண்ணாத கரும நெறி நரகுக்கே ஏதுவாகும்.

(3) இறையுணர்வில்லாத கருமநெறி பயனற்றது என்பதையும், இறைபுகழ்பாடும் இரவலர் பிழைப்பும் ஏற்றமுடைத்து என்பதனையும் தாருகாவனத்து முனிவர்களுக்கு விளக்கவே சிவபெருமானும் பிட்சாடனராக வந்தாரன்றோ?

(4) இறையுணர்வில்லாத "கரும - மீமாம்சா - வாதம்" பயனற்றது என்பதையே ஆதிசங்கரரும் மண்டன மிச்ரரிடம் வாதிட்டு நிலைநாட்டினார். வைதீக நெறியினைப் பல பணிகள் மூலம் வளர்த்த சங்கரர் மண்டனமிச்ரர் தனது முன்னோர்களுக்குச் 'சிரார்த்தம்' செய்துகொண்டிருந்தசமயத்தில் அவர் வீட்டினுள் வலிய நுழைந்து வாதிற்கழைத்தார் என்பது வரலாறு.

(5) எங்கும் இறைவன் என்று எண்ணாதவருக்குக் காவிரியாடுதல், கங்கையாடுதல் போன்ற சடங்குகள் அல்லது கருமங்கள் மாத்திரம் பயன் தரா என்று அப்பரடிகளும் முழங்கினாரன்றோ?

(6) அனைத்துலகினையும் அன்னையின் வடிவாகக் காணும் அன்பர் பெருமையினை எண்ணாத நெஞ்சு தீவினைசூழ்ந்த நெஞ்சாகும் என்னும் பொருள்படவும் 'கருமநெஞ்சு' என்றார்.

(7) யாராவது இழிந்த செயலொன்றைச் செய்யும்பொழுது நாம் "கருமம் கருமம்" என்று தலையில் தட்டிக்கொள்ளுகின்றோம். அவ்வாறே அன்பர்பெருமை எண்ணாத கருமநெஞ்சினரைக் கண்டு அபிராமிபட்டர் பரிதாபப்படுகிறார்.

(8) "அவ்வினைக் கிவ்வினையாம்" என முன் வினைப்பயனென்று முயற்சியேதும்செய்து உய்வினை நாடாதுநிற்கும் ஊனநெஞ்சே அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சாகும்.

உ. மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதர்

(1) அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சு நரகுக்கு ஏதுவாகிறது. அன்னவர் தலைகீழாய் நரகிடை வீழ்கின்றனர்.

(2) மிக உயர்ந்தது அன்பர் பெருமை. அதை எண்ணாதவருக்குக் கிடைப்பது மிகக் கொடிய தண்டனை! நரகிடை தலைகீழாய் வீழ்தல்வேண்டும்.

(3) நரகிடை வீழ்வோரை அவர்களது சந்ததியினர் செய்யும் நற்கருமம் மேலேற்றும் என்பர். ஆனால் அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சினரின் சந்ததியினர் நற்கருமம் அவர்களைச் சற்று மேலே எழுப்பினாலும் கரும நெஞ்சு மீண்டும் கீழே அழுத்துகிறது ஆகவே மறிந்தே 'விழும்' நரகுக்கு உறவாய மனிதர் என்றார்.

(4) அன்பர் பெருமை எண்ணாதவருக்கு இவ்வுலகில் உறவினர் பலர் சூழ்ந்திருந்தாலும் அவர்களுக்கு உண்மையான உறவு நரகு மட்டுமே. ஆனால் அன்பருக்கு அனைத்துலகும் உறவாகும்.

ஊ. வெருவிப் பிரிந்தேன்.........மனிதரையே"

(1) ஆகவே, அத்தகையகொடியநட்பைவிட்டுவிலகிவிட்டேன்.

(2) விழுத்துணை அம்பிகையே. கருமநெஞ்சுடைய மனிதரால் நம்மைக் கடைசிவரை காக்கமுடியாது. தெய்வபலத்தையே நம்பி சாதாரண மனிதரைப் பிரிந்தேன் என்றார்.

(3) 'மனிதரையே' என்பதனை ஏளனக் குறிப்பாகவும் (irony) கொள்ளலாம். ஏனெனில் அன்பர் பெருமை எண்ணாத கரும நெஞ்சினர் மனிதவடிவினரானாலும் மனிதரல்லர்.

எ. அடைக்கலமே செல்வமாகும்

(1) இப்பாடலில் 'திருவே!' என்ற ஒருசொல்லால் அம்பிகையை விளித்திருப்பது சிறப்புடைய ஒன்றாகும், அம்பிகையின் திருவடியே உண்மையான - நிலையான செல்வமாகும்.

(2) 'மகாலட்சுமி' என்று லலிதாசகஸ்ரநாமத்திலும் திருமகளாக அம்பிகை புகழப்படுகிறாள். அதனை அபிராமிபட்டர் உபயோகித்திருக்கும் இடம் மிகவும் சிறப்புடைத்து.

(3) வைணவ உரையாசிரியர்கள் "சரணாகதியே சிறந்தசம்பத்" என்று விளக்குவர். பிறன்மனை நோக்கிய பேதமையாளனைவிட்டு நீங்கி இராமனிடம் வீடணன் அடைக்கலம் புகுந்ததைக் குறிப்பிடும் பகுதியில் - அவன் இராமனைநோக்கிவரும்பொழுது அவனுக்கு வால்மீகி முனிவர் "ஸ்ரீமான்" அதாவது 'திருவாளன்' என்ற சொல்லினை அடைமொழியாகக் கொடுக்கிறார்.

(4) ஆண்டாளின் திருப்பாவையில் எளிய ஆயர் சிறுமிகளை அவர்களது சரணாகதிநோக்கி "செல்வச்சிறுமீர்காள் !" என்று அழைப்பதனையும் இங்கு ஒப்புநோக்கவேண்டும்.

(5) இராவணனைப்பிரிந்து இராமனைச்சேர்ந்தவிடத்து 'ஸ்ரீமான்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டதுபோல், இந்த நரகுக்கு உறவாய மனிதரைப் பிரிந்து அன்னையின் திருவடிக்கே செறிந்தநிலையில், தான்பெற்ற அடைக்கலப்பேற்றை எண்ணி - அதுவே பெருஞ்செல்வநிலை என்பதை எண்ணி அன்னையினைத் 'திருவே !' என்று வாயார அழைத்தார் பட்டர்.

(6) அம்பிகைநெறியில் அனைத்துமே ஸ்ரீமயம். அம்பிகையினைப் புகழும் வேதத்தின்பகுதி ஸ்ரீசூக்தம். சகஸ்ரநாமத்தில் முதல்நாமா ஸ்ரீமாதா !

அம்பிகையின் மந்திரம் ஸ்ரீவித்தை !
அதனை உபதேசிப்பவர் ஸ்ரீகுரு !
அம்பிகையின் யந்திரம் ஸ்ரீசக்ரம் !
அம்பிகையின் நகரம் ஸ்ரீநகரம் !
அம்பிகையின் புரம் ஸ்ரீபுரம் !

இவ்வாறு அனைத்தும் ஸ்ரீ என்னும் திருவுடன் தொடர்புகொண்டு விளங்குகின்றன. அவளுடன் தொடர்புடைய அனைத்தும் அழகு, செல்வம், கண்டாரால் விரும்பப்படும் தன்மை ஆகியவெல்லாம் பெறுகின்றன. மொத்தத்தில் அவளே ஸ்ரீயின் சொரூபம். அல்லது திருவின்வடிவு. ஆகவே அவளைத் திருவே ! என தித்திக்கவிளிக்கிறார்.

ஏ. மூன்றும் பாடலிது மூன்றினைக் கூறும்.

(1) இப்பாடலின்மூலம் அன்னையினை அறியும் தெளிந்தஞானம், தீயார் சேர்க்கையை விடுதல், அடைக்கலம் புகுதல் ஆகிய மூன்றும் குறிப்பிடப்பட்டன.

(2) இப்பாடலின் பாராயண பலன் தெளிவான அறிவும், நல்லோர் நட்பும், பகைநீங்கலும் ஆகும்.

களைக, இணங்குக, வழிபடுக!

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், பேராசிரியர்,

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., பிஎச். டி.

மயக்கம் நீங்குதல் :

இறைவன் திருவருளினால் உயிர்களுக்கு அறிவு விளக்கம் உண்டாகின்றது அறியாமை மெல்ல மெல்ல விலகுகின்றது. ஆனால் உயிர்கள் என்ன எண்ணுகின்றன? தாமே அறிந்தது போலவும், தம்முடைய முயற்சியினாலேயே விளக்கம் அடைந்ததுபோலவும் எண்ணி மயங்குகின்றன. இந்த மயக்கம் நீங்கினால்தான் உண்மை விளங்கும். 'விபரீதஞானம்' என்று இதனைக்கூறுவது பொருந்தும். இந்த விபரீத ஞானம் விலகினால்தான் உண்மை ஞானம் தோன்றும். அப்போதுதான், தான்யார்? தன் நிலை என்ன? தன்னை இந்நிலைக்குக் கொண்டுவந்த தலைமகன் யார்? என்ற வினாக்களுக்கு விடை விளங்கும்.

திருமந்திரமும் திருக்குறுந்தொகையும் :

பின்வரும் அப்பரடிகள் திருவாக்கு ஊன்றி உணர்தற்குரியது.

"தன்னில் தன்னை அறியும் தலைமகன்
தன்னில் தன்னை அறியில் தலைப்படும்
தன்னில் தன்னை அறிவிலன் ஆயிடில்
தன்னில் தன்னையும் சார்தற்கு அரியனே."

(அப்பர் தேவாரம் - 2054)

திருமூலர் திருமந்திரத்தில், இதேகருத்து, ஏறத்தாழ இதே வடிவ அமைப்புடன் உரைக்கப்பட்டமை இங்கு ஒப்பிடத்தக்கது.

"தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற் கரியவே"

(திருமந்திரம் - 2349)

திருநாவுக்கரசர் திருவாக்கில் பின்வரும் மற்றெரு திருப்பாட்டும், அதனேடொத்த திருமந்திரத் திருப்பாட்டும் மேலும் உணர்தற் குரியன.

"என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்அடியான் என்று அறிதலும்
தன்னை நானும்பிரான் என்று அறிந்தெனே"

(அப்பர் தேவாரம் - 901)

"என்னை அறிந்திலேன் இத்தனை காலமும்
என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன்
என்னை அறிந்திட் டிருத்தலும் கைவிடாது
என்னை யிட்டென்னை உசாவு கின்றுனே"

(திருமந்திரம் - 2566)

மெய்கண்டார் திருவாக்கு :

இறைவன் உயிர்களுக்குச் செய்துள்ள, செய்துவரும் உபகாரங் களை உயிர்கள் மறவாது நன்றியுணர்வுடன் போற்றும் கடப்பாடு உடையன என்பது இச்சான்றேர் திருவாக்குக்களால் இனிது விளங்கும். இந்த நன்றியுணர்வு இல்லாவிடில் உயிர்களுக்கு உய்வு இல்லை. திருவள்ளுவரும், "எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை; செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றனன்றே அருளி யுள்ளனர் !

சிவஞான போதத்துப் பன்னிரண்டாம் சூத்திரத்துத் திருவெண் பாவில் மெய்கண்டார் இந்தப் பேருண்மையை எடுத்துணர்த்தி யருளினுர்.

"**தன்னை அறிவித்துத் தான்தானுச் செய்தானைப்**
பின்னை மறத்தல் பிழை யலது — முன்னவனே
தானே தானுச்செய்தும் தைவமென்றும் தைவமே
மானே தொழுகை வலி"

இத்திருவெண்பாவின் முதல் இரண்டு அடிகளில், இவ்வருளாசிரியர், உணர்த்தியருளிய பேருண்மையை உலகில் வாழும் அனைத்துயிர் களும் மறந்திடவியலாது.

மாதவச் சிவஞானமுனிவர் விளக்கம் :

தன் உண்மையை அறிய இயலாமல் கண்மூடிக் குருடாய்க் கிடந்த உயிர்களுக்குப் பலவகையிலும் உணர்த்தினன் இறைவன்; அதுமட்டுமோ! எத்துணையும் எளியதாய்க் கிடந்த அவ்வுயிரைப் பண்படுத்தித் தானாகும்வண்ணம் செய்த பெருங்கருணை உடைய பேரருளாளன் அன்றோ முதல்வன்! அவ்வுதவியை உயிர் மறக்குமாயின், அது தீர்திறன் உடைய குற்றமன்று என்பதனை இவ்வருட் சான்றோர் எத்துணை உறுதியாக விளக்கிவிட்டனர்.

> **" தன்னை அறிவித்துத் தான்தானச் செய்தானைப்**
> **பின்னை மறத்தல் பிழை "**

அறியாமற்செய்த குற்றமாயின் அது மன்னிக்கப்படும்; இது அப்படிப் பட்ட குற்றம் அன்று என்று குறிப்பிப்பதற்காகவே,

> " பின்னை மறத்தல் பிழை "

என்று கூறியருளினர் என்பர் மாபாடிய உரையாசிரியரான மாதவச் சிவஞான முனிவர்.

" தமது முதல்தானே குருவாகலின் தான் தானச் செய்தானை என்றும், முன்னை மறந்த குற்றம் அறியாது நிகழ்ந்ததாகலிற் கழுவப் படும், இஃது அதுபோற் கழுவப்படுவதன்றென்பார் பின்னைமறத்தல் பிழையல்து என்றும் கூறினர் " (சிவஞானபோதம் - பயனியல் 12 ஆம் சூத்திரம், 4 ஆம் அதிகரணம் உரைப்பகுதி.)

மூன்று கட்டளைகள் மூன்று அதிகரணங்கள் :

மெய்கண்டார் இவ்வாறு உணர்த்தி, இச்சூத்திரத்துக்கூறும் ஏனைய மூன்று கட்டளைகள் சீவன்முத்தர்க்கே கூறப்பட்டன என்றால் மும்மலச் சார்புள்ள எல்லா உயிர்கட்கும் உரியன. இக்கட்டளைகளைச் சுருக்கமாகக் (1) களைக (2) இணங்குக (3) வழிபடுக என்று உரைக்கலாம். இவற்றை இச்சூத்திரத்தின் முதல்மூன்று அதிகரணங் களாக்குகின்றனர் மாதவச் சிவஞான முனிவர். ' அசிந்திதனாய்நின்ற பதியைச் சிந்திதனாகக் கண்டு வழிபடுமாற்றை ' உணர்த்தும் இச் சூத்திரத்தின் திருவடிவம் பின்வருவது :—

> " செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
> அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
> மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
> ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே. "

(1) களைக :

"ஆணவ, மாயை கான்மிகமென்னும் மலங்களைக் களைக"

இவ்வாறு களையவேண்டும் என்பதற்கான காரணம்:

அவைதாம் ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும் ஆகலான் என்பது.

(2) இணங்குக :

"சிவபக்தர்களோடு இணங்குக"

இதற்குக் காரணம் :

"அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர் ஆகலான்" என்பது.

(3) வழிபடுக :

"பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக்கண்டு வழிபடுக"

இதற்குக் காரணம் :

"அவன் மற்றிவ்விடங்களிற் பிரகாசமாய் நின்றே அல்லாத விடத்து அப்பிரகாசமாய் நிற்றலின்" என்பது. (முதல்வன் எங்கும் நிறைந்து நிற்பினும், இவ்விரண்டிடத்தும் மட்டுமே தயிரில் நெய் போல விளக்கி நிலைநிற்பான்; பிற இடங்களில் பாலில் நெய்போல வெளிப்படாமல் நிற்பான் என்பது இத்தொடரின் பொருள்.)

எல்லா உயிர்க்கும் ஏற்றன :

மெய்கண்டார் அருளிய இந்த மூன்று கட்டளைகளுக்கும் விளக்கம் காணவேண்டுமாயின், மூவர் தேவாரப் பாக்களிலும், மணிவாசகர் அருளிய திருவாசகத்தும் எண்ணற்ற இடங்கள் உண்டு. அவை அனைத்தையும் இந்தச் சாத்திர உணர்வோடு நோக்கினுல் அவற்றின் இன்றியமையாமையும், பொருளாழ மாண்பும் இனிது புலன் ஆகும். இன்னும் சீவன்முத்தர்களுக்கே நம் அருளாசிரியர் இவ்வாறு இம்மூன்று விதிகளையும் விதிப்பாராயின், எளிய நிலையில் உள்ள எல்லார்க்கும் இவை எத்துணை இன்றியமையாதன என்பது கூறாமலே விளங்கும். இதற்கு அடிப்படை, முதல்வன்கருணைக்கு நன்றி பாராட்டி வழிபடவேண்டும் என்ற உணர்வே. அதனையே இந்தச் சூத்திரத்திலும், மேற்குறிப்பிடப்பட்ட வெண்பாவிலும் இவ்வருளாசிரியர் தெளிவுறுத்தியுள்ளனர் என்று கூறுவதுமிகையாகாது.

செந்தமிழ்ச்செல்வர்,

திரு. கி. வா. ஜகந்நாதன் எம். ஏ.

பண்முகந்த தேவாரப் பாடலொடு திருமுறைகள்
பரப்பி என்றும்
தண்முகந்த அருள்கொழிக்கும் பெருஞ்செயலும் புலவர்தமைத்
தாங்கும் பொற்பும்
உண்முகந்த அன்பினெடு படைத்திருக்கும் தருமபுர
உயரா தீனச்
சண்முகதே சிகப்பெயர்கொள் ஞானகுரு இக்கடிதம்
தன்னைக் காண்க. (1)

பணிவுடனே எழுதுகின்றேன், காய்ந்தபயிர் தனக்குமழை
பரிவிற் பெய்து
அணிபெறவே தழைக்கவைத்த செயல்போல நீஅருளின்
அனுப்பி வைத்த
கணிசமுற தொகைபெற்றேன் ; இருநூற்றைம் பத்தொன்று
கண்டேன் ; நின்றன்
தணிவரிய அறநினைவும் தமிழ்வளர்க்கும் பெருஞ்செயலும்
தாபித் தாயே. (௨)

வானேக்கும் நெற்போல வரன்நோக்கும் கன்னிபோல்
மாண்பார் தாயைத்
தான்நோக்கும் சேய்போலப் புலவர்கள் புரவலர்தம்
தருமம் நோக்கித்
தேன்நோக்கும் கவிபொழிந்தார் ; வள்ளல்கள் நலம்செய்து
சிறப்பித் தார்கள்
கூன்நோக்கும் மனமுடையார் ஈதறியார் ; நின்கொடையைக்
குறிக்கொள் வாரோ ? (௩)

தருமபுரம் எனநின்றன் ஆதீனப் பெயர்ப்பொருளைத்
தாபிக் கின்றாய் ;
அருமைபெறும் நூல்வெளியிட் டுத்தமிழை மிகவளர்த்தாய் ;
அரிய சைவப்

பெருமையினை உலகத்தோர் அறிந்திடவே பலசெயல்கள்
பேணிச் செய்தாய்;
கருமைபெறும் இக்கலியில் ஒளிபடைத்துப் புகழ்படைத்துக்
கவினு கின்றாய். (4)

சிவம்வளர்க்கும் திருத்தரும புரம்மேவும் ஆதீனம்
சிறந்து வாழி!
தவம்வளர்க்கும் மடாலயத்தின் சிறப்பெங்கும் பரவநனி
தழைத்து வாழி!
பவம்வளர்க்கும் துன்பகலக் குருமொழிசொல் நின்னுடைய
பண்பு வாழி!
நவம்வளர்க்கும் அறம்புரியும் நீஎன்றும் தழைத்தோங்கி
நன்கு வாழி! (5)

அன்னை அருள்மாலை

திருமுறைக்கலாநிதி,

வேலூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

நெல்வெண்ணெய் மேவுநீல மலர்க்கண் ணம்மை
நிகரிலாத் திருக்கோவலூர்
நிலவிநம் நெஞ்சிலுறை சிவானந்த வல்லிநா
நிலம்பரவு மறையணிநலூர்
நல்வரம் ஈயும்அருள் நாயகி இடையாறு
நகரில்சிற் றிடைநாயகி
நாதனமர் திருவெண்ணெய் நல்லூரில் வேற்கண்ணி
நலந்தரும் திருத்துறையூர்
கொல்புலித் தோலன்மகிழ் பூங்கோதை நாயகி
குறைவிலாத் திருவடுகூர்
குடிகொண்டு வாழ்கின்ற வடுவகிர்க் கண்ணம்மை
கோதிலா நல்லமுத்துப்
பல்வண்ணச் செல்வியே பைந்தமிழ்ப் பாவையே
பண்ணிலுறு பெண்ணமுதமே
பஞ்சின்மெல் லடியிணையைத் தஞ்சம் அடைந்தென்றும்
பணிவேற்கருள் அன்னையே. (29)

அறுகயிறூசல்

சிவமணி புலவர். திரு. ம. சிவசம்பு பி. லிட்.

சிறுகுழந்தைகளுக்கென வீட்டில் கயிற்றூல் ஊஞ்சல் கட்டியிருந்தேன். அவ்வூஞ்சலில் ஆடுவதுதான் குழந்தைகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி. அவ்வூஞ்சல் குழந்தைகள் கற்பனைக்கு இரயிலாக மாறுகிறது. காராக மாறுகிறது. பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தேன். அவ்வூஞ்சலில் பெரியபையன்வந்து உட்காரவந்தான். குழந்தைகள் அவனை உட்காரக்கூடாது என்று தடுத்தன. அவன் அதையும்மீறி உட்கார்ந்தான். ஊஞ்சல் கட்டி நாளாகிவிட்டிருந்தபடியால் கயிறு நைந்துபோய் இருந்திருக்கிறது. அவன் உட்கார்ந்து ஆடியதும் கயிறு அறுந்து ஊஞ்சலுடன் தரையில் விழுந்தான். குழந்தைகள் கைகொட்டி நகைத்தன. ஊஞ்சலுடன் தரையில் இருந்தவாறே அவனும் சிரித்தான். இச்சம்பவம் எனக்கு **"ஊஞ்சல் கயிறற்றூல் தாய்தரையேயாந் துணையான்'** என்னும் சிவஞானபோத வாக்கியத்தை நினைவூட்டியது.

ஊசல் படும் பரிசு :

ஊஞ்சல் இங்கும் அங்குமாக அலையும். அதுபோல் உயிர்கள் புண்ணியப்பயனுல் பூதசாரதநுவுடன் சுவர்க்க உலகங்களிலும் பாவப் பயனுல் பூதமாதநுவுடன் நரகவுலகங்களிலும் கலப்பு வினைப்பயனுல் பூதபரிணமதநுஉடன் பூவுலகிலும் எண்ணில்காலமாக அலைந்து கொண்டிருக்கின்றன.

பசுவுக்கு ஒருகயிறு, யானைக்கு இருகயிறுகள், குதிரைக்கு மூன்று கயிறுகள், ஊஞ்சலுக்கு நான்குகயிறுகள், உயிர்கட்கு ஐந்துகயிறுகள். ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதம் என்ற பஞ்சமலங்களால் கட்டுண்டு உயிர்கள் சுவர்க்கம், நரகம், பூவுலகம் என்ற மூவிடங்களிலும் உழன்றுதிரிகின்றன ஐந்துசங்கிலிகளால் கட்டுண்ட உயிருக்கு அடுத்து நான்கு சங்கிலிகளால் கட்டுண்ட ஊசல் உவமையாயிற்று.

ஓர் அருளாளன் நான்கு சங்கிலிகளையும் அறுத்தவுடன் ஊஞ்சல் தரையையடைகின்றது. அதுபோல் ஞான ஆசிரியர் ஞானவாளால் பஞ்சமலங்களைச் சேதித்தவுடன் ஆன்மா இறைவன் திருவடியைச் சேர்கின்றது என்று திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் **ஊசல் படும் பரிசு என்று ஒழிவேன்** என்ற கந்தரநுபூதி வரிக்கு விளக்கம் கூறியுள்ளார்கள்.

அறுகயிறூசல் :

நெஞ்சு ஒன்றுவிட்டு ஒன்றைப் பற்றும் இயல்புடையது. பற்றியதை விட்டுவரும். சென்று பற்றுதலும் பற்றியதைவிட்டு நீங்குதலும் அதன் இயல்புகள். ஊசல் ஓரிடத்தில் நிற்கும். அதனை ஆட்டினுல் இங்கும் அங்கும் ஓடும். கயிறு ஊசல்களைக் கவனித்தால் நமக்கு இது நன்கு புலனுகும். திருநாவுக்கரசுசுவாமிகள் நான்காம் திருமுறையில் 'பிறைபுல்கு சடையாய்! கயிறூசல்போல் நெஞ்சமாகிய ஊசல் ஆடி அடியேன் அவ்வூஞ்சல் அற்று நின்பாதம் ஆகிய நிலத்தை அடைந்தேன்' என்கிருர்.

உறுகயி றூசல் போல ஒன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல் போல பிறைபுல்கு சடையாய் பாதத்து
அறுகயி றூச லானேன் அதிகை வீரட்டனீரே. 4—26—6

தாய்தரை :

ஊஞ்சல் ஆடும் போது நம்மைத் தாங்கிக் கொண்டிருப்பது ஊசல் என்றே நாம் நினைக்கிருேம். ஆனுல் ஊசலில் ஆடிக்கொண்டிருக்கும் போது நம்மைத் தாங்கியது தரையேயாகும். ஊஞ்சல் கயிறு எதில் கட்டியிருக்கிறது? சுவர்மேல் உள்ள விட்டத்தில். ஊஞ்சலைத் தாங்குவது எது? விட்டம். விட்டத்தைத் தாங்குவது எது? சுவர். சுவரைத் தாங்குவது எது? தரையன்ருே? ஆனுல் அதை நாம் உணர்வதில்லை. ஊஞ்சலே தாங்குவதாக தவருக எண்ணுகிருேம். அறியாமை நம்மை உணரவிடாமல் செய்துவிடுகிறது. அறியாமை நீங்கி மெய்யுணர்வுடன் பார்த்தால் உண்மை விளங்கும்.

உயிர்கள் கருவுகளின் இயல்புகளை உணராமல் இருக்கும்போது ஆணமலம் தாங்குதலாக இருக்கிறது. கருவுகளின் இயல்புகளை அறிந்து நீங்கும்போது சிவமே தாங்குதலாகும். மலம் தாங்குதலாய் உள்ளபோதும் சிவம் தாங்குதலாக இருக்கிருன். அதை உணராமல் இருப்பதே தடையாகும்.

ஊஞ்சல் கயிறற்ருல் தாய் தரையேயாம் : ஊஞ்சலைக்கட்டிய கயிறு அற்ருல் ஊஞ்சல் தரையில் விழும். விழுந்த ஊஞ்சற்குத் தரை நிலைக்களம் ஆகும். கயிறு போல்வது பாசம். கயிற்ருல் கட்டப்பட்ட ஊசல் போல்வது பாச சம்பந்தம் உடைய உயிர். கயிறற்ற ஊசல் போல்வது பாசம் அற்ற ஆன்மா. கயிறற்ற ஊசற்கு நிலைக்களமாவது தரை. பாசம் அற்ற ஆன்மாவிற்கு நிலைக்களமாவது திருவடி. இதை உணர்ந்து நாம் அறுகயிறு ஊசலாகி இறைவன் திருவடி அடைவோம்.

ஓம்! ஓம்! ஓம்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் வழிபாடு

திருக்கடவூரில் :

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்களது ஆண்டு ஜன்மநட்சத்திர ஆயில்யத்திருநாள் வழிபாடு திருக்கடவூர் ஸ்ரீஅமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில் மிருத்யுஞ்ஜயஹோமம், ஏகாதசருத்ர ஜபம் முதலியவற்றுடன் 23—4—80 அன்று சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ அமிர்தகடேசுவரர், ஸ்ரீ அபிராமியம்மை ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அர்ச்சனையும், ஸ்ரீ காலசம்காரமூர்த்திக்குச் சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றன ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி ஜன்மநட்சத்திர விழா மலராக "அபிராமியம்மைப் பதிகங்கள்" என்றநூலை வெளியிட்டு அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினார்கள்.

மாதந்தோறும் நடைபெறும் முறையில் திருமீயச்சூர் அருள்மிகு மேகநாதர் திருக்கோயிலிலும், திருமீயச்சூர்இளங்கோயில் அருள்மிகு சகலபுவனேசுவரர் திருக்கோயிலிலும் நண்பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் ஆயில்ய வழிபாடு சிறப்பாக நடைபெற்றது. ஆதீன வெளியீடாக அச்சிட்ட தலத்திருப்பதிகநூல் அன்பர்கட்கு வழங்கப்பட்டது. திருப்பதிகப் பாராயணம் நிகழ்த்தப்பெற்றது. தருமையாதீனப்புலவர், வித்துவான். திரு. வி சா. குருசாமி தேசிகர் எம். ஏ., சமய விரிவுரை ஆற்றினார்கள். அன்பர்கள் பலர் பங்கு கொண்டு வழிபட்டுப் பயன்பெற்றனர்.

ஸ்ரீ உமாபதிதேவ நாயனர் குருபூஜை விழா

சந்தானகுரவருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனர் குருபூஜை விழா 27—4—1980 ஞாயிற்றுக்கிழமை நிகழ்வுற்றது. தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயிலில் எழுந்தருளியுள்ள சமயாசாரியர், சந்தாநசாரியர்களுக்கு காலை 9மணியளவில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாட்டாற்றினார்கள். தருமையாதீனத்தின் சார்பில் சிதம்பரம் கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதிதேவ நாயனர் திருமடத்தில்

பகலில் அபிஷேக ஆராதனைகளும், மாலை 6 மணியளவில் தில்லைத் திருக்கோயிலில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்குச் சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றன. தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அன்பர் பலர் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

சித்திரைப் பெருவிழா

சீகாழியில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 20—4—80 முதல் சித்திரைத் திருவிழா தொடங்கி நடைபெற்றது. 21—4—80 இரண்டாந்திருநாள் திருமுலைப்பால்விழா. அன்று பெருமான் உமாதேவியுடன் பிரமதீர்த்தக் கரைக்கு எழுந்தருளித் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கிய காட்சி மிக்க சிறப்புடையது. விழாவைத் தரிசிப்பதற்கு மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முதனாளே தருமைக்கு எழுந்தருளியானார்கள். திருமுலைப்பாலன்று காலை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும், மதுரையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும் தரிசனத்திற்கு எழுந்தருளியானார்கள். திருஞானசம்பந்த சுவாமிகள் சிவிகையில் எழுந்தருளியவுடன் அற்புதவிளக்கச் சொற்பொழிவு தொடங்கப்பெற்றது. முதலில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரையருள, மதுரையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தொடக்கவுரையும், காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளுரையும் வழங்கினார்கள். தொடர்ந்து அறிஞர் பெருமக்கள் ஞானசம்பந்தப்பெருமானது அற்புத நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தார்கள். பிரமதீர்த்தக் கரைக்குப் பெருமான் எழுந்தருளியானதும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பாகனேரி திரு ஆர். சம்பந்தம் பிள்ளை அவர்களுக்குத் "திருமுறைக்கலாநிதி" என்ற பட்டம் அளித்துப் பொன்னாடை போர்த்தி பணமுடிப்பு வழங்கியருளினார்கள். அன்றுமாலை 7 மணி அளவில் மதுரையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசியுடன் சம்பந்தர் தேவாரத்தைப்பற்றிய கருத்தரங்கம் நிகழ்ந்தது.

22—4—80 மாலை செந்தமிழ்ச்செல்வர் திரு. இரா. இராசசேகரன் பி. எஸ்ஸி, பி. எல். அவர்கள் தலைமையில் பட்டிமண்டபமும், 23—4—80 மாலை திருக்குறளார் திரு. வீ. முனிசாமி பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் வழக்காடுமன்றமும், 24—4—80 மாலை திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்கள் சிறப்புரையுடன் திருமுறை வகுப்பு ஆண்டு விழாவும்,

25—4—80 மாலை கவிஞர் திரு. கலைவாணன் அவர்கள் தலைமையில் கவியரங்கமும் நிகழ்ந்தன. அறிஞர்கள் பலர் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு சிறப்பித்தனர். மற்றும் இன்னிசையரங்கு, திருமுறை இசையரங்கு, நாட்டிய நாடகம், பொம்மலாட்டம் முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன,

திருக்கடவூரில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைப் பெருவிழா 20-4-80 முதல் தொடங்கி நிகழ்ந்தது. காலசம்ஹாரத் திருநாளன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். உற்சவ நாட்களில் சொற்பொழிவுகளும் இன்னிசை விரிவுரைகளும் நிகழ்வுற்றன. 23—4—80 அன்று திருமுறை விழாவும் தேவாரவகுப்பு ஆண்டுவிழாவும் நிகழ்ந்தன.

திருப்பனந்தாளில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 20—4—80 முதல் சித்திரைப் பெருவிழா சிறப்பான முறையில் நடைபெற்றது. உற்சவநாட்களில் அறிஞர் பலர் கலந்துகொண்டு சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசை விரிவுரைகளும் நிகழ்த்தினர்.

திருவையாற்றில் :

தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருவையாறு ஸ்ரீஐயாறப்பர் திருக்கோயிலில் சித்திரைப் பெருவிழா, 20—4—80 முதல் தொடங்கி சிறப்பாக நடைபெற்றது. விழாநாட்களில் தக்க அறிஞர் பலர் சமய விரிவுரை நிகழ்த்தினர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை விழா

தருமபுரத்தில் :

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜைவிழா சிறப்பாக நிகழ்வுற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகள் காலை 7-மணியளவில் நிகழ்வுற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். இரவு ஆதீன ஓதுவாமூர்த்திகளின் பண்ணிசைப் பாராயணத்துடன் திருவீதியுலா நடைபெற்றது. திருவீதியுலாவில் வித்துவான் திரு. மு ஆறுமுகதேசிகர், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன்

ஆகியோர் அற்புத விளக்கச் சொற்பொழிவு ஆற்றினர். அன்பர் பலர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

திருவாமூரில் :

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் அவதரித்ததலமாகிய திருவாமூரில், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் 7, 8, 9 ஆகிய மூன்று நாட்களிலும் சிதம்பரம் கனகசபை நகர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக்குழுவினரால் மிகச் சிறப்பாகக்கொண்டாடப்பெற்றது. இம்மூன்று நாட்களிலும் திருமுறை இசையரங்கம், கருத்தரங்கம், பண்ணாராய்ச்சி, வழக்காடுமன்றம், இசையரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் அமைந்து சிறந்தன. 9—5—80 அன்று சதயத் திருநாள் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவாமூருக்கு எழுந்தருளி வழிபாடாற்றினுர்கள். விசேஷ அபிஷேக ஆராதனைகட்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவெண்ணைநல்லூர் ஓதுவார் திரு. ஆ. இராசுப்பிள்ளை அவர்களுக்குத் 'திருமுறைக் கலாநிதி' என்னும் பட்டம்வழங்கிப் பொற்கிழி அளித்து ஆசி அருளினுர்கள். வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கியருளினுர்கள். அன்று இரவு 10 மணியளவில் அருள்மிகு அப்பர்பெருமான் திருவீதியுலாக்காட்சி திருமுறைப் பாராயணத்துடன் நிகழ்வுற்றது.

ஸ்ரீ முத்துச்சட்டை நாதசுவாமிக்குச் சிறப்பு வழிபாடு

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு 9—5—80 வெள்ளியன்று சிறப்பான முறையில் நிகழ்ந்தது காலையில் ஸ்ரீ முத்துச்சட்டைநாத சுவாமி யதாஸ்தானத்திலிருந்து புறப்பாடாகி வலம்புரி மண்டபத்திற்கு எழுந்தருளலும், அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றபின் இரவு புறப்பாடாகி யதாஸ்தானத்திற்கு எழுந்தருளலும் அதற்குப்பின் புழுகாப்புத் தரிசனமும் நிகழ்வுற்றது தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினுர்கள்; தரிசனத்திற்கு வந்திருந்த அன்பர் பலருக்கும் அருட்பிரசாதங்கள் வழங்கினுர்கள். அன்று மாலை 5-மணியளவில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமிதேசிகர்,எம். ஏ. 'அட்டபைரவர்' என்ற பொருளிலும், சென்னை வித்துவான் திரு. என். இராமலிங்கம் 'ஆபதுத்தாரணர்மாலை' என்ற பொருளிலும் சொற்பொழிவு ஆற்றினர். அன்பர் பலர் வந்திருந்து சொற்பொழிவுகளைக் கேட்டும் சுவாமி தரிசனம் செய்தும் பயன் பெற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

ரௌத்திரி௵ வைகாசி௴ 1உ முதல் 32உ முடிய.

(14—5—80 முதல் 16—6—80 முடிய)

ஸ்ரீ ரௌத்திரி௵ வைகாசி௴ 1உ புதவாரம் பரணிநக்ஷத்திரம் நாகவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 8 நாழிகை 2 விநாடிக்கு மிதுனலக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரிய பகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மேஷ ராசியிலிருந்து ரிஷபராசி சங்கிரமணமாக வைகாசிமாதப்பிரவேசம் செய்தருளுகிறார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலமாகும். சங்கிரமகால கிரகஸ்திதியின் பலனாவது நாடுகளில் எங்கும் கோடைமழைபெய்து புன்செய்நிலம் வளமடையும். லோக நாடுகளில் எங்கும் பரஸ்பர நிலைமை ஏற்படும். தேசங்களில் கிரகயோகபலனால் ஈசுவரானுக்கிரகத்துடன் வருகின்ற ஜனப்பிரதிநிதிகள் மந்திரிகள் நாடுகளில் தொழில்வளம் ஏற்படவும் ஜன சமூகத்தினர் பொருளாதாரம் பெருகி உயரவும் முஸ்தீப்பு செயல் திட்டங்களை உருவாக்கி நடைமுறைக்கு வரச் சேவை நல்குவர். தேசங்களில் அறநிலைய கர்த்தாக்களால் ஆங்காங்கு தர்மங்கள் தெய்வகைங்கரியங்கள் வெகுவாக நடைபெற்றுக்கொண்டிருக்கும்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உள்ள சிவஞான குருமகான்கள் சிவசமய சம்பிரதாய ஆசாராதி நியம நலவழியினை லோகமாந்தர்களுக்குப் போதித்து சிஷ்யகோடிகளானவர்கள் அனுஷ்டித்துவர ஆசியருள்வார்கள். லோகமெங்கும் சைவ சங்க நிறுவனங்கள் நன்கு ஏற்படுவதாகும். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகாலபூசைகள் விசேஷகாலபூசைகள் நியமமாக நடைபெற்று வரும். திருக்கோயில்களில் வசந்தோற்சவம் வேதபிராமணர்களின் வேத முழக்கம் தெய்வப்பிரீதி சைவவேத தேவார இன்னிசைகளுடன் விமரிசையாக நடைபெறும் சிவபக்தர்கள் பரவசத்துடன் மூர்த்திகளைத் தரிசனம்செய்து புனித மனோநிலையில் நற்கிரியைகள் செய்து உய்வார்கள்.

ராகு கேது பெயர்ச்சி

குறிப்பு :— ஸ்ரீ ரௌத்திரி௵ வைகாசி௴ 4உ (17—5—80) சனிக்கிழமை திருவாதிரை நக்ஷத்திரம் அன்று உதயாதி 33 நாழிகை 37 விநாடியளவில் மாலை மணி 7 நிமிஷம் 34க்கு ஆயில்ய நக்ஷத்திரம் 4ஆம் பாதத்தில் கடகராசியில் இராகுபகவானும் அவிட்ட நக்ஷத்திரம் 2 ஆம் பாதத்தில் மகரராசியில் கேதுபகவானும் மாறுதலாகி அவற்றில் 1½ வருஷ காலம் சஞ்சரிப்பார்கள். இவர்கள் இராசி மண்டலத்தில் அப்பிரதக்ஷிணமாகச் சஞ்சரிப்பவர்கள்.

இதனால் ரிஷபம், சிம்மம், கன்னி, விருச்சிகம், கும்பம், மீனம் இவ்விராசியையுடையோருக்குச் சிரம நீக்கம், மனோதைரியம், பல வகை வருமானங்கள், சத்துருஜயம், பிரபல கீர்த்தி ஆகிய நற்பலன்களும் ஏற்படுவதாகும்.

மேஷம், துலாம், கடகம், மகரம் இவ்விராசியுடையோருக்கு அடிக்கடி வெளியூர்பயணம், பலசிந்தனை, அலட்சியத்தால் கௌரவ ஹானி, வாகன நஷ்டம், விவசாயம் பாதித்தல் ஆகிய மத்திமபலன்களாயினும் சனீஸ்வரன் நிலைமையால் அனுகூலம் ஏற்படும்.

மிதுனம், தனுசு இவ்விராசியை உடையோருக்குத் தாயாதி பந்துக்கள் விரோதம், பொருளாதார நெருக்கடி, அற்ப ஜனங்களின் நிஷ்டூர வார்த்தை, உத்யோகமாறுதல், முன்கோபத்தில் அவசர ஏற்பாடுகள், விபத்துண்டாகுதல் ஆகிய அதமபலன் தோன்றும்.

பரிகாரம் :- எல்லாராசியை உடையோரும் சிவாலயம் சென்று சுக்கிர வாரத்தில் ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு நெய்தீபம் ஏற்றி அருச்சனை செய்துவரச் சகல நன்மையும் ஏற்படும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி – கார்த்திகை ¼

(சு. சே. சோ. லா. - லி. லு. லே லோ. - அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனவருமானங்கள் கண்யத்திற்குஏற்ப வரவாகிக்கொண்டிருக்கும். பொன் மணி பூஷணங்களை அளிக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் சான்றோர்களால் புகழப்படுதல், அரசாங்க நன்மை ஏற்படுதல் ஆகும். வாகன சுகம் திருப்தியளிக்கும். பெண் மகவு ஒன்று ஏற்படும் தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். வைகாசி ௴ 15உ 42 நாழிகை 20 விநாடி முதல் 18உ 4 நாழிகை 3 விநாடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி – மிருகசீர்ஷம் ½
(இ. ஊ. ஏ. - ஒ. வ. வி. வு - வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் நல்லவிதமாக வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் எழுத்துமூலகாரியங்களில் 12 தேதி முதல் நற்பலனை உண்டுபண்ணும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடக்கும். மனோத்ஸாகம் ஏற்படும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். வைகாசிமீ 18உ 4 நாழிகை 3 வினுடி முதல் 20உ 19 நாழிகை 32 வினுடி வரையில் சந்திராஷ்டமம் திங்கள் செவ்வாய் சுபமாகும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை – புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ங. ச்சா. - கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனு நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வரவிற்கேற்பச் செலவினங்களும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். நவீன பொருள்கள் வாங்குவதில் பணம் முடங்கும் சகோதரர் பந்து அம்மான்களின் முன்னேற்ற சௌகரியங்களுக்காக அதிக ஈடுபாடு சாதனையில் திருப்தி ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வைகாசிமீ 20உ 19 நாழிகை 32 வினுடி முதல் 22உ 29 நாழிகை 36 வினுடிவரையில் சந்திராஷ்டமம் புதன் வியாழன் சுபமாகும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.
(ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் தனச் செலாவணி மதிப்பாக இருந்துவரும். பொன் மணி பூஷணம் தரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். எல்லாக் காரியங்களும் மன உறுதிப்பாடாகச் செயல்பட்டுவரும். வித்துவத்துவத்தில் பிரபல ஸ்திதியாகும். அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். வைகாசிமீ 22உ 29 நாழிகை 36 வினுடிமுதல் 24உ 36 நாழிகை 28 வினுடிவரையில் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபமாகும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் – உத்திரம் ¼
(ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானங்கள் வெகுவாக வந்துகொண்டிருக்கும். சகோதரர்களுக்கு நல்லன ஏற்படும். வித்தியாவியாபாராதி கலைத்துறைகளில் உத்தியோகத்தில் உயர்வை ஏற்படுத்தும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து

வரும். வைகாசி மீ 24உ 36 நாழிகை 2 வினாடி முதல், 26உ 42 நாழிகை 29 வினாடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி :— உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

(டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நிரந்தரமாக உள்ள பண வருமானம் நிற்காமல்வரும். புத்திரர் பந்துக்களின் முன்னேற்றத்திற்கு ஆதரவு பான்மையால் செலவினங்கள் மிகும். 4உ முதல் விசேஷமான காரியங்களைச் செய்விக்கும். உத்தியோகத்தில் நல்லவை ஏற்படுதல் ஆகும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். வைகாசி மீ 26உ 42 நாழிகை 29 வினாடி முதல் 28உ 50 நாழிகை 22 வினாடி வரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

7. துலாம் :— சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் பண வருமானம் மூன்று விதங்களில் வரும். சகோதரர் பந்து அம்மான்களின் விசுவாசம் அனுசரணைகள் பலந்தரும். இயந்திர சாதனம் கருத்த வஸ்துவின் பிராப்தி இவற்றில் நற்பலனாக இருந்து வரும். ஓர் ஸ்தல யாத்திரை சென்றுவருதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். வைகாசி மீ 28உ 50 நாழிகை 22 வினாடி முதல் 31உ 0-13 வினாடி வரையில் சந்திரஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

8. விருச்சிகம் :— விசாகம் ¼ - அனுஷம் – கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்பாபிவிருத்தியில் 4உ முதல் பணத் தோதுக்களில் லேவா தேவிகளில் நல்லன ஏற்படும். சகோதரருக்குச் சுபம் தரும். பூமி பிராப்தி இயந்திர சாதனம் இவற்றில் நல்லன ஏற்படும். வித்தியா வியாபாராதி கலைத் துறைகளில் 1 தேதி முதல் அதிக நன்மைகளை ஏற்படுத்தும். புத்திரர் சௌக்கியம் தாரசௌக்கியம் நன்றாக இருந்துவரும். வைகாசி மீ 4, 5, 31, 32 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

9. தனுசு :— மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில், மேடை பிரசங்கங்களில் நற்கீர்த்தியைத்தரும். அரசாங்க

அலுவல்கள் விரைவுடன் செயல்பட்டுக்கொண்டிருக்கும். நல்லோர் பெரியோர் சந்திப்பு புத்துணர்வான சம்பவங்கள் நிகழும். தாரபுத்திரர்களுக்குச் சௌக்கியம்தரும். வைகாசிமீ 5உ 56 நாழிகை 14 விடி முதல் 8உ 18 நாழிகை 34 விடிவரையில் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனதிசௌகரியங்களில் நல்ல நிலைமையை ஏற்படுத்தும். சகோதரருக்கு ஓர் விபத்துவந்து தப்பும். வித்துவத்துவம் கலைத்துறையில் எழுத்துமூலகாரியங்களில் 12 தேதிக்குமேல் சிலாக்கியபலன் வரும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனைசெய்ய நலம்பல ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் ஏற்படும். வைகாசிமீ 8உ 18 நாழிகை 34 விடி முதல் 10உ 46 நாழிகை 5 விடி வரையில் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

(கு, கே. - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள்கணிசமாகவந்துகொண்டிருக்கும். சகோதரருக்குச் சுபம் தரும். அவர் ஜீவனோபாயத்தில் உயர்வுதரும். வெளுமை வஸ்து பிராப்தியில் விருத்திகாணும், பெண் மகவு ஒன்று ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். வைகாசிமீ 10உ 46 நாழிகை 5 விடி முதல் 12உ 15 நாழிகை 18 விடி வரையில் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபமாகும்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$– உத்திரட்டாதி – ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்கள் மூன்றுவிதங்களில் வந்துசேரும். வீடு வாகனப் பிராப்தியில் நற்பலன் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். புத்திரர் பௌத்திரர்களினுல் மகிழ்ச்சிநிலவும். வித்துவத்தில் மேலிடத்திய நன்மைகளை ஏற்படுத்தும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம்நிலவும். வைகாசிமீ 13உ 15 நாழிகை 18 விடி முதல் 15உ 42 நாழிகை 20 விடி வரையில் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபமாகும்.

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுச் சந்தா	(உள்நாடு)	ரூ.	9—00
ஆண்டுச் சந்தா	(சிலோன்)		11—00
ஆண்டுச் சந்தா	(வெளிநாடு)		17—00
ஆயுள் சந்தா	(உள்நாடு)		100—00
ஆயுள் சந்தா	(வெளிநாடு)		125—00

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மாயூரம். 609 001.
தஞ்சை மாவட்டம்.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ குமரகுருபரர்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் முதல்வருமான ஸ்ரீகுமரகுருபரசுவாமிகளின் திருப்பெயர் கொண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளியநடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சிக்கட்டுரைகளுடன் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் மாத இதழாக வெளிவருகிறது.

ஆயுட் சந்தா	(உள்நாடு)	ரூ.	100—00
,,	(வெளிநாடு)		125—00
ஆண்டுச்சந்தா	(உள்நாடு)		7—50
,,	(ஸ்ரீலங்கா)		10—00
,,	(வெளிநாடு)		12—00

நிர்வாக ஆசிரியர்: "ஸ்ரீ குமரகுருபரர்"
ஸ்ரீ காசி மடம் : திருப்பனந்தாள்.
தஞ்சை மாவட்டம். 612 504.

வைகாசிமாதச் சிறப்பு நாட்கள்

14—5—80 புதன் தருமபுரம் ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம் சர்வ அமாவாசை. விஷ்ணுபதி புண்ணியகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். ரிஷபரவி 8-2.

15—5—80 வியாழன் வேளூர்க் கிருத்திகை.

19—5—80 திங்கள் ஆச்சாள்புரம், திருக்குவளை, வைத்தீசுவரன் கோயில், மதுரை, மாயூரம் முதலிய தலங்களில் வைசாக உற்சவாரம்பம். ஸ்ரீ சேக்கிழார் குருபூஜை.

20—5—80 செவ்வாய் திருமாகாளத்தில் சோமயாஜி யாகம்.

21—5—80 புதன் ஆயில்ய விழா.

23—5—80 வெள்ளி வைசாக உற்சவ ரிஷபவாகனக் காட்சி. தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை.

25—5—80 ஞாயிறு தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவ அனுக்ஞை முதலிய பூர்வாங்கம்.

26—5—80 திங்கள் தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவ

27—5—80 செவ்வாய் பிரதோஷம். [துவஜாரோகணம்.

28—5—80 புதன் அக்கினிநக்ஷத்திர நிவிருத்தி 2-33. வைத்தீசுவரன் கோயில், ஆச்சாள்புரம் முதலிய இடங்களில் வைசாக உற்சவ தீர்த்தம், சீகாழியில் ஸ்ரீ ஞானசம்பந்தருக்கு ரக்ஷாபந்தனம்.

29—5—80 வியாழன் பௌர்ணமிவிரத பூஜை. மாத பூஜையில் சந்தனம் சாத்துதல்.

30—5—80 வெள்ளி தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் ரிஷபவாகனக்காட்சி.

31—5—80 சனி ஆச்சாள்புரம் ஸ்ரீ தோத்திரபூர்ணாம்பிகை உடனுகிய ஸ்ரீ திருஞானசம்பந்தருக்குத் திருக்கல்யாணம். இரவு 4 மணிக்கு ஜோதிதரிசனம். ஐக்கியம். சீகாழி, காரைக்கால் தருமபுரம் ஸ்ரீ திருஞானசம்பந்தர் அபிஷேகம். ஐக்கியம்.

1—6—80 ஞாயிறு தருமபுரம் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கல்யாண வைபவம். வெள்ளிரதத்தில் ஏகாசனக் காட்சி. திருப்பனந்தாள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

2—6—80 திங்கள் சங்கடஹரசதுர்த்தி. [மாகேசுவரபூஜை

3—6—80 செவ்வாய் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவ திருத்தேர்.

4—6—80 புதன் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவ தீர்த்தம். தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ ஆதி குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை. அன்றுமாலை 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் காவிரியில் திருமஞ்சனம் செய்து குருமூர்த்தங்களை வழிபடுதல். இரவு திருமெய்ஞ்ஞானப்பாவாடையுடன் குருபூஜை வழிபாடு ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி துவஜாவரோகணம்.

5—6—80 வியாழன் தருமையாதீன மடாலயத்தில் மாகேசுவரபூஜை. இரவு 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பட்டணப்பிரவேசம்.

10—6—80 செவ்வாய் திருக்கடவூர் ஸ்ரீ முனீஸ்வரபூஜை. பிரதோஷம்.

11—6—80 புதன் மாதசிவராத்திரி. வேளூர்க் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம். ஆனித்திருமஞ்சன

12—6—80 வியாழன் சர்வ அமாவாசை. [உற்சவ ஆரம்பம்.

14—6—80 சனி ஷடசீதி புண்யகாலம். மிதுனரவி 32-14. திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம்.

தருமையாதீனம்

ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி

திருத்தேரில் உலாவருதல்

Printed & Published by V. Ramaiah Pillai Manager Dharmapura
at the Gnanasambandam Press. Dharmapuram Mayuram 10—5—8